விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 03 வியாழக்கிழமை (19.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

# அமைதியான தேர்தல் வடக்கில் நடக்கும்

## கண்காணிப்புக் குழு நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியாக இடம்பெறும் என்ற நம்பிக்கையுள்ளதாக யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ள சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் இந்தியாவின் முன்னாள் தேர்தல்கள் திணைக்கள ஆணையாளரும் உள்துறைச் செயலாளருமான கோபாலசுவாமி தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புக்கு எதிரான மனு ஏற்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது எனக் கூறி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர உட்பட 06 தரப்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதியரசர்கள் குழு, மனுக்கள் சம்பந்தமாக எதிர்வரும் 2ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உத்தரவிட்டது.

இந்த வழக்கு முடியும்வரை வடக்கு மாகாண சபைத் தேர்தலை இடைநிறுத்துமாறு மனுதாரர்கள் கோரியிருந்தனர். எனினும் தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை. (எ-11)

## 80 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை இல்லை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் 80 ஆயிரம் வாக்காளர்களுக்கு இன்னும் தேசிய அடையாள அட்டை வழங்கப்படவில்லை என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

தேர்தல் காலத்தினை முன்னிட்டு கபே (19ஆம் பக்கம் பார்க்க)

## அதிகரித்த இராணுவ பிரசன்னம் வடக்குத் தேர்தலுக்கு இடையூறு

### ஜெனிவா அமர்வில் கரிசனை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கையின் நிலைவரம் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளதுடன், வடக்கில் தற்போதிருக்கும் படையினரின் அதிகரித்த பிரசன்னமானது எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலுகக்கு இடையூறாக அமையக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 24ஆவது அமர்வில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆணைக்குழுவின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மனிதவுரிமைகள் விவகாரங்கள் பற்றிய பொது விவாதத்தில் உரையாற்றிய அமெரிக்கப் பிரதிநிதி, இலங்கை பற்றிக் குறிப்பிடுகையில் (19ஆம் பக்கம் பார்க்க)

## சல்மான் குர்ஷித்தை சந்திக்கிறார் பீரிஸ்

(சென்னை)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நாளை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பிரிஜ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் விளிம்பு நாடுகளது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 19 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை குர்கானில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் உள்ளிட்ட இவ்வமைப்பில் அங்கம்வகிக்கும் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இதன்போது இலங்கை வெளிவிவகார (19ஆம் பக்கம் பார்க்க)

## யாருக்கு வாக்களிக்கிறீர்கள் எவருக்கும் தெரிய வாய்ப்பில்லை!

### மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள மக்கள் யாருக்கு வாக்களிக்கின்றீர்கள் என்பதை யாரும் ஒருபோதும் தெரிந்து கொள்ள முடியாது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல் கண்காணிப்பு பணிகளில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட குழுவினரும் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் மக்கள் முறைப்பாடு செய்வதற்கு விசேட இலக்கங்கள் உள்ளன.

தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக பொது மக்கள் அவசர அழைப்புக்களை 1996 இலக்கத்திற்கு மேற்கொள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனுக்கு ஏற்பட்ட கதியே விக்னேஸ்வரனுக்கும் ஏற்படும்!



### அஸ்வர் மிரட்டல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஏற்பட்ட கதியே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரனுக்கும் ஏற்படும் என ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எ.எச்.எம்.அஸ்வர் மிரட்டல் விடுத்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சைக் கண்காணிக் (19ஆம் பக்கம் பார்க்க)


# தயவுசெய்து சிரமம் பாராமல் வாக்களியுங்கள்



- வாக்குரிமை-ஜனநாயக உரிமை-சிரமம் பாராமல் வாக்களியுங்கள்.
- உங்கள் வாக்கு எமது சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும்.
- நீங்கள் வாக்களிக்கத் தவறினால் ஒரு சிறந்த பிரதிநிதி தோற்கடிக்கப்படலாம்.
- கடந்த காலங்களுக்காக நிகழ்காலத்தில் வாக்களியுங்கள்.
- இம்முறை தவறினால் இன்னொரு வாய்ப்புக்காக 5 வருடங்கள் நீங்கள் காத்திருக்க நேரிடும்.
- வாக்களியுங்கள்-ஜனநாயக செயற்பாட்டில் பங்களிப்புச் செய்யுங்கள்.
- வாக்களியுங்கள்-கடமையைச் செய்து உரிமையைக் கேளுங்கள்.
- வாக்களியுங்கள் - நேர்மையான, திறமையான, பொதுநலமுள்ள, தலைமைத்துவப் பண்பில் சிறந்த ஒருவரை தெரிவு செய்யுங்கள்.
- வாக்களிக்காவிட்டால் உங்கள் உரிமையை நீங்களே அழித்துக் கொள்கின்றவர்களாக மாறுகின்றீர்கள்.

**எனவே சிரமம் பாராது எதிர்வரும் 21 ஆம் திகதியன்று வாக்களியுங்கள்**




Home for Human Rights
மனித உரிமைகள் இல்லம்
මානව හිමිකම් නිවහන

(3975)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயிற்சியில் ஈடுபட்ட கார் வாய்க்காலுக்குள் பாய்ந்தது



தந்தை செல்வா சதுக்கத்தின் முன் உள்ள கழிவு வாய்க்காலுக்குள் நேற்று காலை கார் ஒன்று தலை குப்புறக் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

சாரதியப் பயிற்சியை நடத்தும் நிறுவனம் ஒன்றின் காரில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கார் வேகமாக வாய்க்காலுக்குள் பாய்ந்ததாகத் தெரியவருகின்றது.

காரில் இருந்த சாரதிப் பயிற்சியாளரும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவரும் படுகாயங்களுக்குள்ளாகி நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-8-11)

# பலத்த மழை பெய்யும்

நாட்டின் பல பாகங்களிலும் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்யும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் பலத்த மழை பெய்யக்கூடும் என அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பில் மணித்தியாலத்திற்கு 70 கிலோ மீற்றருக்கும் அதிகமாக காற்று வீசக்கூடும் என்பதால் கடல் கொந்தளிப்பாக காணப்படும்.

இதனால் கடலில் பயணிப்போர், மீனவர்களை மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு அந்த நிலையம் மேலும் கேட்டுக் கொண்டுள்ளது. (எ-11)

# பதுளையில் நில அதிர்வு

பதுளை பசறை பிரதேசத்தில் நேறறு மாலை நில அதிர்வு உணரப்பட்டதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. நேற்று மாலை 4.30 அளவில் இந்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

2 முதல் 3 ரிச்டர் அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது. இந்த நில அதிர்வு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் அளவு கோலிலும் பதிவாகியுள்ளது. (எ-11)


## பகிரங்க ஏல விற்பனை

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் உள்ள 2 நல்லின யமுனாபாறி கடா ஆடுகள் *02.10.2013* புதன் கிழமை காலை *10* மணிக்கு பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளது.

ஏலத்தில் தெரிவு செய்யப்படுபவர்கள் உடனடியாக முழுப்பணத்தையும் செலுத்தி கடாக்களை நிலையத்தில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

கடாக்களை பார்வையிட விரும்புவோர் கிழமை நாட்களில் காலை *8.30* மணி தொடக்கம் மாலை *3.30* மணி வரை பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்தில் பார்வையிடலாம்.

**டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம்**
உதவிப் பணிப்பாளர்,
கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(சி-4739)



## தவறிவிட்டது

902631682V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் பல்கலைக் கழக அடையாள அட்டை, ATM காட், வாகன அனுமதிப்பத்திரத்துடன் பேஸ் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

**செ.பிறேமகாந்**
**077 639 0709**

(3983)


# தேர்தலுக்குப் பின்னர் பிரதமரை மாற்ற திட்டம்-ரணில்

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் ஆட்சியை மாற்றும் தேர்தல் இல்லை என்று ஜனாதிபதி கூறினாலும் இந்த தேர்தல் பிரதமரை மாற்றும் தேர்தல் என்று ஜனாதிபதி குறிப்பிடுவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களில் உரையாற்றும்போதே ரணில் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

நடைபெறவுள்ள தேர்தல் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் தேர்தல் இல்லை என்றாலும் அது பிரதமரை மாற்றும் தேர்தல் என்பது மலை நாட்டு மக்களுக்கு புரிந்து விட்டது. இந்த தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றால் மலை நாட்டுக்கு கிடைத்துள்ள பிரதமர் பதவி பறிக்கப்படும்.

மலைநாட்டை சேர்ந்த ஒருவரை முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச முதன் முதலாக பிரதமராக நியமித்தார். கண்டியை சேர்ந்த டி.பி. விஜேதுங்கவை பிரதமராக நியமித்தது மாத்திரமன்றி நாட்டின் முக்கிய அமைச்சு பதவியான நிதியமைச்சையும் அவருக்கு கொடுத்தார்.

ஜனாதிபதியாக இருந்த பிரேமதாச புத்தசாசன அமைச்சை தனது பொறுப்பில வைத்து கொண்டார். ஆனால் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முக்கியமான நிதியமைச்சை தனது கட்டுப்பாட்டுககுள்வைத்து கொண்டு புத்தசாசன அமைச்சை மட்டும் பிரதமருக்கு வழங்கியுள்ளார்.

மலைநாட்டை சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை ராஜபக்ஷ அரசாங்கம் இப்படிதான் நடத்தி வருகிறது. இதனால் மலை நாட்டில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிக்க தீர்மானித்து விட்டனர் என்றார். (எ-11)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (வன்னி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. யாழில் 1976 இல் இருந்து...




- An international language, the language of culture
- A language for education, a language for job market and
- A language that is fun to learn

➢ Just say "*Yes, I can... speak French*"

குறிப்பு: தற்போது A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட அனுமதிகள்...

புதிய வகுப்பு மிக விரைவில்... உடன் பதிவு செய்யவும்...

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

(3958)



## இன்று திருமண வரவேற்பு உபசாரம்

*கொழும்பில் 14.09.2013 அன்று திருமணம் நடைபெற்ற*

### ஆதிரையன் கோகிலவாணி

புதுமணத் தம்பதிகளுக்கு
வரவேற்பு உபசாரம்
19.09.2013 இன்று
வியாழக்கிழமை
சுன்னாகம் மணமகன் இல்லத்தில்
மாலை நடைபெறும் உபசாரத்தில்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

கலாபூஷணம் சு.துரைசிங்கம்
(ஓய்வுநிலை அதிபர்)
பட்டம்மாள்

118, ஸ்ரேசன் லேன்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(சி-4742)



## தொடர்ந்தும் மேலதிக சேவையில்...

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் **(24 மணித்தியாலயம்)** உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

**குறிப்பு:** விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(c-4740) T.P. No.:-021 222 5392



## இத்தாலி சட்டரீதியாகச் செல்ல ஆலோசனை

- ✶ நோர்வே, ஜேர்மனி, சுவிஸ் சட்டரீதியான நுழைவிற்கு துரித ஆலோசனை
- ✶ டென்மார்க்கில் படிக்க, 250,000/- வரை உழைக்க ஆலோசனை
- ✶ உணவு, இருப்பிடம், ரிக்கர் இலவசம்.
- ✶ ஹொலண்டில் படிக்க, 200,000/- வரை உழைக்க ஆலோசனை
- ✶ உணவு, இருப்பிடம், ரிக்கர் இலவசம்.
- ✶ மலேசியாவில் படிக்க, 65,000/- வரை உழைக்க சட்ட ஆலோசனை
- ✶ வெறும் 300,000/- மட்டும் போதுமானது

(சி-4735)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090





Sri Lankan Chartered [இலங்கை பட்டயக்கணக்காளர் ] கற்கைநெறி
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
அதி சிறந்த வசதிகளுடன் கூடிய முற்றிலும் மாறுபட்ட முறையில்

CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

K-AIMS

புதிய பிரிவுகள் 25th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104, 021 221 9422
COLOMBO 0772 555 814

(சி-4736)



## அதி விரைவு சேவை
## உள்ளாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

உங்கள் உறவிகளுக்கு 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான அதிவிரைவு சேவை இப்பொழுது பெற்றுக்கொள்ள



- மிகக்குறைந்த கட்டணம்:
- 3 தொடக்கம் 5 நாட்களில் ஆன சேவை (தேவை ஏற்படின் 3 நாட்கள் சேவை கட்டணம் வேறுபடும்)
- நீங்கள் குறிப்பிடும் முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- இது போன்று மற்றைய நாடுகளுக்கும் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
- முன்னணி பொதிகள் சேவை நிறுவனத்துக்கூடன சேவை
- இந்த கட்டண சலுகை குறிப்பிட சில தினங்கள் மட்டுமே (சி-4741)

**எங்கும் இல்லாத கட்டணம்**
(உதாரணமாக) கனடா 1 Kg தொடக்கம் 10 Kg 1 Kg கட்டணம் 1300/- 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg -900/- மட்டும் அறவிடப்படும்

**திருமுருகன் கொம் நெற்**
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835 (ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
TCN Express இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

# இன்று ஒரு தகவல்

## தகவல் ஜோசியம்

இதுவரைக்கும் உங்களுக்கு தகவல் தானே சொல்லிக் கொண்டிருந்தேன். இன்று உங்களுக்கு ஜோசியம் சொல்லப் போகிறேன். நாடி ஜோசியம், ரேகை ஜோசியம் மாதிரி இது தகவல் ஜோசியம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். கவன மாகக் கேளுங்கள். நான் சொல்வதெல்லாம் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று நீங்களே முடிவு செய்யுங்கள்.

நீங்கள் எப்படிப்பட்டவர் என்றால் அடுத்தவர்கள் உங்களை விரும்ப வேண்டும். பாராட்ட வேண்டும் என்று எண்ணம் உங்க ளிடம் அதிகமாக இருக்கும்.

உங்களிடம் உள்ள நல்லது–கெட்டதை அடிக்கடி நினைத்துப் பார்ப்பீர்கள். அப்படி சுயமாக விமர்சனம் செய்யும் தன்மை உங்களிடம் உண்டு.

உங்களிடம் உள்ள திறமைகளில் பலவற்றை பயன்படுத்தி நன்மையடையாமல் வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்! என்ன சரிதானா?

உங்கள் ஆளுமையில் பல குறைகள் இருந்தால் கூட பொது வாக அதற்கெல்லாம் நீங்கள் வேறு வகையில் ஈடு செய்து விடுவீர்கள்! அடிக்கடி உங்களுடைய முடிவுகளும் செயல் களும் சரியானவைதானா என்ற சந்தேகம் உங்களிடம் தீவிரமாக ஏற்படுவதுண்டு.

நீங்கள் ஓரளவுக்கு மாற்றமும்– புதுமையும் ஏற்பட வேண்டும் என்று ஆசைப்படுவீர்கள்; கட்டுப்பாடுகளும் தட்டுப்பாடுகளும் உங்களை அடக்கி வைக்கும் போது உங்களுக்கு அதிருப்தி உண்டாகும். நாம் சுயேட்சைக்கு சிந்திக்கக் கூடியவர் என்ற நினைப்பு உங்களிடம் உண்டு. மற்றவர்கள் சொல்வதை ஆதார மில்லாமல் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள்.

மற்றவர்களிடம் நம்மைப் பற்றி அளவுக்கு மீறி வெளிப் படையாகப் பேசுவது புத்திசாலித்தனமில்லை என்பதை நீங்கள் புரிந்து வைத்துள்ளீர்கள்.

நடைமுறைச் சாத்தியமில்லாத ஆசைகள் உங்களிடம் உண்டு. சுய பாதுகாப்பு என்பது உங்களுடைய முக்கியமான இலட்சியங் களில் ஒன்று.

சில சமயம் மற்றவர்கள் உங்களிடம் வந்து சகஜமாக பழகக் கூடிய அளவுக்கு நடந்து கொள்வீர்கள். சில சமயம் கவன மாக இருப்பீர்கள், தயங்குவீர்கள், ஒதுங்கிப் போய்விடுவீர்கள். இதுவரை நான் சொன்ன ஜோசியம் உங்களுக்கு ஒத்து வருகிறதா?

அப்படி ஒத்துப் போனால் என்னைப் பாராட்டாதீர்கள். நீங்கள் பாராட்ட வேண்டியது (Ross Stager) என்ற மனோதத்துவ நிபுணரை!

அவர் நடத்திய உளவியல் சோதனையில்தான் இந்தப் பலன்கள். எனக்கு ஜோசியமும் தெரியாது, ஒன்றும் தெரியாது. பொதுவாக மனிதர்கள் பாராட்டுக்களை விரும்புபவர்கள் விமர்சனங் களை வெறுப்பார்கள்– அதை மனதில் வைத்து பலன் சொன் னால் சரி.

ஒருவரை "கருமி" என்று சொல்வதை விட சிக்கனமானவர் என்று சொன்னால் அவர் ஏற்றுக் கொள்வார். சொல்லும் பலன் எல்லாம் பொதுப்படையானதுதான் என்றாலும் அது தனக்கு மட்டுமே உரியவை. கண்டு பிடிக்கப்பட்டவை என்ற பிரேமையை கேட்பவர் மனதில் உண்டாக்க வேண்டும். அதுதான் ஜோசியரின் சாமர்த்தியம். இந்த பிரேமைக்கு உளவியலாளர் "பார்னம் உத்தி" என்று பெயர் வைத்துள்ளனர்.

பீனியஸ் பார்னம் என்பவர் 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக் காவில் ஒரு பிரபல சர்க்கஸ் கம்பனி நடத்தி வந்தார்.

"உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு ஏமாளி பிறந்து கொண்டு இருக்கிறான்" என்பதுதான் அவருடைய சித்தாந்தம்.

ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்துவது மாதிரி கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தியதுதான் அவருடைய மகத்தான வெற்றிக்கு காரணமாம்.

அந்த உத்தியை வைத்துதான் இப்பொழுது பல பேர் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பிழைப்பு நடத்தும் ஒரு சாமியாருக்கு ஏகப்பட்ட தொண்டர்கள். பல பேருக்கு அவர் அருள் வாக்கு சொல்வார்.

ஒரு நாள் ஒரு அம்மா கவலையுடன் அவரிடம் வந்தார்.

இவர் அவரைப் பார்த்தவுடன் "கவலைப்படாதே சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுச் சென்ற உன் வீட்டுக்காரன் ஒரு நாள் வந்து சேருவான்" என்றார்.

அந்த அம்மா போனவுடன் சீடன் அவரிடம் "அது எப்படி சுவாமி சரியாக சொல்றீங்க?" என்று கேட்டான்.

அதற்கு அவர் "அவளுடைய தொந்தரவு தாங்க முடியாமல் தலைமறைவு ஆகிவிட்ட அந்த அப்பாவி நான் தானப்பா!" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி அமைச்சினால் இல ங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறு வனத்தினால் தலைமை அலுவலகத் திற்கான உள்ளக கணக்காய்வாளர், கணக்காளர், நூலகப் பொறுப்பாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தலைமை அலுவலகத்திற்கான உள் ளக கணக்காய்வாளர் பதவிக்கான வெற்றிடத்திற்கான விண்ணப்பத் தகை மைகளாக இலங்கை பட்டயக் கணக் காளர்கள் நிறுவனத்தின் அனுமதி பெற்ற சான்றிதழ், இடைநிலைச் சான் றிதழ் அல்லது கணக்காய்வுத் துறை யின் 5 வரு டங்களுக்கு சமனான அனு பவத் தகைமை அல்லது கணக்காய் வில் HNDA உடன் 5 வருடங்கள் அனுபவம், கணக்காய்வில் 5 வருட அனுபவத்துடன் கணக்கியல் அல் லது நிதி முகாமைத்துவத்தில் பட்டம் ஆகிய தகைமைகளை பெற்றிருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம், கேகாலை ஆகிய இடங்களுக்கு கணக்காளர் பதவிக்கான தகைமைகளாக, கணக்காளர் துறையில் உயர் தேசிய டிப்ளோமா அல்லது முகா மைத்துவ கணக்காளர் பட்டய நிறு வனத்தின் (cima) இடைநிலை மட்டத் தகைமை அல்லது சான்றிதழ் மற்றும் சுவட்பண்மை கணக்காளர் சங்கத்தின் (ACCA) இடைநிலை மட்டத் தகைமை அல்லது முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் பட்டம் மற்றும் ஓர் அரச அல்லது தனியார் கணக்கியல் மற்றும் நிதியில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியில் குறைந்தது 3 வருட தகை மையாக கொள்ளப் படும்.

மேலும், யாழ்ப்பாணம், அம் பாறை ஆகிய இடங்களுக்கான நூல கப் பொறுப்பாளர் பதவிக்கு நூலக விஞ்ஞானத்தில் பட்டத்துடன் SLIATE இல் MA 3 தரம் ஒன்றில் 5 வருடங்கள் அனுபவமும் அங் கீகாரம் பெற்ற பல்க லைக்கழகம் ஒன்றில் நூலக விஞ்ஞானத்தில் பட்டம் பெற் றிருப்பதுடன் உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் நூலகத் தில் 2 வருட அனுபவம் அல் லது நூலக விஞ்ஞானத்தில் டிப்ளோமாவுடன் உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் நூலகத்தில் 3 வருடங்கள் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்விண்ணப்பம்கோரல் தொடர்பான மேலதிக விபர ங்களை நிறுவன விளம்ப ரப் பலகையில் பார்வையிட முடியும். விண்ணப்பதாரி கள் சுய மாக தயாரித்த விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வாறு இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், "ஜனவத்து பியச" இல 320, சி.பி.ஜயா மாவத்த கொழு ம்பு–10 எனும் முகவரிக்கு கடித உறை யின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப் பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைத் தல் வேண்டும் என்வும் அறிவிக்கப் பட்டுள்ளது. (அ–7)

# வட பகுதி தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை

தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்துள்ளவர்களுள் தற்போது மாகாண சபை தேர்தல் இடம் பெறவுள்ள மாவட்டங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்ப் படிவங்களுக்கு முன்னுரிமை வழங் கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, வடமாகாணத்திலிருந்து விண்ணப்பித்துள்ளவர்க ளுக்கான தேசிய அடையாள அட்டையினை துரித கதியில் தபால் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட் பதிவு திணை க்களத்தின் ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத்குமார குறிபிட்டுள்ளார்.

வடமாகாணத்திலிருந்து நடமாடும் சேவை உட்பட மொத்தம் 33 ஆயிர த்து 843 விண்ணப்பங்கள் கிடைக் கப்பெற்றதாகவும் இதற்கமைய யாழ் மாவட்டத்துக்கு 31 ஆயிரத்து 668 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவுக்கு 2 ஆயிரத்து 296 அடையாள அட்டைகள் அனுப்பி வைக் கப்பட்டுள்ள அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற 5 ஆயிரத்து 148 விண்ணப்பப் படிவங் களுக்கு அமைய 4 ஆயிர த்து 885 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் ஆர். எம்.எஸ். சரத்குமார குறிப்பிட் டுள்ளார். மன்னார் மாவட்டத்துக்கு 5 ஆயிரத்து 260 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மிகுதியாகவுள்ள விண்ணப்பங் களுக்கான அடையாள அட்டை களை வி நியோகிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் விண்ணப்பங்களிலுள்ள இலக்கங்கள் மற்றும் பிறப்பு சான்றிதழ் போன்றவ ற்றில் காணப்படும் தெளிவின்மையே அடை யாள அட்டை விநியோகத்தில் காலதாமதம் ஏற்படுத்துவதற்கு பிர தான காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ–2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 80 |
| தக்காளி | 120 | 90 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 70 | 80 |
| கரட் | 60 | 80 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 100-120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 |
| பாகற்காய் | 60 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 80 |
| பயற்றங்காய் | 40 | 80 | 50 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 10 | 20 | 40 |
| கறிமிளகாய் | 50 | 40 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 100 |
| போஞ்சி | 120 | 80 | 140 |
| கீரை – 1 பிடி | 10 | 25 | 25 |
| தேசிக்காய் | 450 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 70 | – |

# இராசி பலன்

*19.09.2013*
*(புரட்டாதி 03, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*பூரணை மாலை 5.44 மணிவரை*
*பூரட்டாதி முன்னிரவு 7.40 மணிவரை*
*இராகுகாலம் 1.33-3.03 மணிவரை*
*சுபநேரம் 7.33-9.03 மணிவரை*
*உமாமகேஸ்வர விரதம்,*
*பூரணை விரதம்*

**மேடம்** கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக் கறை காட்டுவீர்கள், காரிய அலைச் சல்கள் சற்று அதிகரிக்கும், சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படும் சூழ்நிலை உருவாகலாம்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும், தொலை பேசித் தகவல் மகிழ்ச்சி தரும், நண் பர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

**மிதுனம்** தொட்ட காரியங்கள் வெற்றி தரும், அரசு வழியில் அனுகூலமுண்டு, அந் நியர் உதவியுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** திடீர் பயணங்களால் நன்மையடை வீர்கள், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தந்தை வழி உறவினர்களால் அனுகூலமுண்டு, தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**சிங்கம்** எதிர்பாராத வகையில் சில மனஸ் தாபங்கள் ஏற்படலாம், போசன சுக முண்டு, பிரயாண பயமுண்டு, சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, போசன சுகமுண்டு.

**கன்னி** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், காரிய நன்மையுண்டு, பயணத்தால் பலனுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கௌர வமான நாள்.

**துலாம்** பாக்கிகள் வசூலாக்கி பரவசப்படுத்தும், தேக நலன் சீராகும், தொழில் முன் னேற்றமுண்டு, சுவாரஸ்யமான நாள், துணிவும் தன்னம்பிக்கையும் அதி கரிக்கும்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், உறவினர் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வழிபாடு களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** பயணங்களால் பலனுண்டு, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உற்சாகத் துடன் பணிபுரிவீர்கள், விருந்து களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு

**மகரம்** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக் கும் நாள், அன்பு நண்பர்களின் ஆத ரவு பெருகும், உடன் பிறப்புக்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக் கறை காட்டுவர்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடை பெறலாம், வாக்கு மேன்மையுண்டு, மாதர் நட்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மீனம்** பொருளாதார நலன்கருதி வெளியூர்ப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ் நிலை உருவாகும், ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

வளவன்

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்

(கரணவாய்)

துன்னாலை கக்குசம்பா எனும் இடத்தில் கசிப்பு தயாரித்துக் கொண்டிருந்த பெண்ணை நெல்லியடிப் பொலிஸார் கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர்.

இக் கைது நடவடிக்கை கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மேற்படி பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட தகவலையடுத்து அவ்விடத்துக்கு சென்ற பொலிஸார் வீடொன்றில் கசிப்பு தயாரித்துக் கொண்டிருந்த பெண்ணையும் அங்கு வைக்கப்பட்டிருந்த கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பெண்ணும் கைப்பற்றப்பட்ட பொருட்களும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

துன்னாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியிலும் வியாபாரத்திலும் ஈடுபட்ட சிலர் ஏற்கனவே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-9-60)







# தேர்தல் கண்காணிப்பு பணிகளில் தேர்தல் அதிகாரிகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியாகவும்,நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் நோக்குடனும் வன்முறைகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு வாக்காளர்கள் உட்படுவதைத் தடுக்கும் நோக்குடனும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை கண்காணிப்பு பணியில் ஈடுபடவுள்ளனர் என தேர்தல் திணைக்களத்தின் வடக்கு மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளரும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் அச்சுதன் தெரிவித்துள்ளார்.**

அத்தோடு தேர்தல் விதிமுறைகள் மற்றும் அடக்குமுறைகள், அச்சுறுத்தல்கள் தொடர்பில் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய யாழ். மாவட்டத்தில் மட்டும் 6 நிலையங்கள் செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதில் ஒரு நிலையம் யாழ்.மாவட்ட செயலகத்தில் செயற்படும் எனவும் 021 3207298 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாட்டை பதிவு செய்யமுடியும்.

இதேபோன்று சாவகச்சேரியில் 021 3211 553 என்ற இலக்கத்துடனும் பருத்தித்துறையில் 021 3207443 என்ற இலக்கத்துடனும் சண்டிலிப்பாய் பகுதியில் 021 3207297 என்ற இலக்கத்துடனும் வேலணையில் 021 32 11549 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு பதிவு செய்யமுடியும்.

இதனைவிட 021 3735584 என்ற இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி பொலிஸாரிடமும் முறையிட முடியும் எனவும் தெரிவித்தார்.

பொது மக்களின் முறைப்பாடுகள் உடனடியாக ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனைவிட நாளை காலை முதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை தேர்தல் திணைக்கள அதிகாரிகள் வாகனங்களில் கண்காணிப்பு பணியில் ஈடுபடவுள்ளனர்.

இதன் போதும் அசம்பாவிதங்கள் தொடர்பாக முறையிட முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாண சபைத் தேர்தல் உட்பட மூன்று மாகாணசபைத் தேர்தல் நிலவரங்களையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கண்காணிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழுவும் வடக்கிற்கு விஜயம் செய்துள்ளது.

இந்த சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழுவிற்கு இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல்கள் ஆணையாளரும் உள்துறை செயலாளருமான கோபாலசுவாமி தலைமை தாங்குகின்றார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக் கப்படும் வரை இந்த சர்வதேச கண்காணிப் பாளர்கள் குழுவினர் வடக்கில் தங்கியிருந்து நிலைமைகளை கண்காணிக்கவுள்ளனர்.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழு வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு வரவழைக்கப்படமாட்டாது என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அழுத்தம் காரணமாக இலங்கை அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-6)

# சகல பாடசாலைகளுக்கும் பால் வழங்கும் திட்டம்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

வடமாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பால் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

யாழ். வட்டு இந்துக் கல்லூரியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நவோதய கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், வட்டு.இந்துக் கல்லூரி பல புத்திஜீவிகளையும் மேதைகளையும் உருவாக்கியுள்ளது.

ஆயிரம் பாடசாலைகளின் மஹிந்ததோதய திட்டத்தில் இப் பாடசாலையும் உள்ளடங்கியுள்ளதனால் அதன் முதலாவது கட்டமாக தொழில்நுட்ப ஆய்வு கூடம் கட்டப்பட்டு வருகின்றது.

இவ் ஆய்வு கூடத்துக்கான உபகரணங்களும் எதிர்வரும் மாதங்களில் வழங்கி வைக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பெற்றோர்களை மதிப்பதை பற்றிக் கற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

அத்துடன் மாணவர்களின் போசாக்கு மட்டத்தினை உயர்த்துவதற்காக பாடசாலைகளில் பால் வழங்குவதும் மதிய உணவு வழங்கும்திட்டங்கள்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்றார். (அ-9-17)







60 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட காரைநகர் பிரதேச செயலக கட்டடத்திறப்பு விழா நேற்றையதினம் மு.ப.11 மணியளவில் அமைச்சர்களினால் திறந்து வைக்கப்பட்ட போது...

(படங்கள்:- உ.சாளீன்)

# சிறுவர் கழகங்கள் அங்குரார்ப்பணம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேசத்தில் யாழ்.சமூக சேவை செயற்பாட்டு மையத்தினரால் சிறுவர் கழகங்கள் மூன்று அமைக்கப்பட்டுள்ளன.

சிறுவர் கழகங்கள் ஆட்டுப்பட்டி, பட்டி ஓடை, காட்டுப்புலம் ஆகிய இடங்களிலே அமைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் கலந்து கொண்டு இக் கழகங்களை அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர். (அ-9-60)

# மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதே அரசாங்க ஊழியர்களின் தலையாய கடமை

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடபகுதி பிரதேச செயலர்கள் தென்பகுதிக்கு கடமைக்குச் செல்ல தயாராக இருக்குமாறு அரசாங்க நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ .பி.ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.**

அரச ஊழியர்கள் எங்கும் கடமைக்குச் சென்றாலும் பிரிவினைவாதத்திற்கு இடம் அளிக்காமல் சேவையாற்றினால் தான் நாடு முன்னேற்றமடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 60 பில்லியன் ரூபா செலவில் காரைநகர் பிரதேச செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் நிதியுதவிகளினைப் பெற்றே இப்பிரதேச செயலகங்களை அரசாங்கம் அமைத்து வருகின்றது.

இவ்வாறு வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நிதியுதவிகள் எமது மக்களின் வரிப் பணத்தின் மூலமாகவே மீளச் செலுத்தி வருகின்றோம்.

மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தக் கூடிய நிறுவனங்களை நிறுவி அவற்றினூடாக மக்களின் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட அனைத்து மாவட்டங்களிலும் பிரதேச செயலக கட்டடங்களை அமைத்து வருகின்றோம்.

இவ்வலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலகர்களுக்கு வாகனங்களையும் ஏனைய வசதிகளினையும் வழங்கி வருகின்றோம்.

வடக்கு கிழக்கில் நிர்வாக சேவையினை உயர்வடையச் செய்ய வேண்டும் என்பதே ஜனாதிபதியின் பாரிய எதிர்பார்ப்பு. 30 வருட கால போரினால் அழிவை எதிர்நோக்கிய வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்து நாட்டின் ஏனைய மாகாணங்களைப் போன்று மாற்றியமைப்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும். கடந்த காலங்களில் பெருமளவில் தமிழ் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க முடியாத காரணத்தினால் மீண்டும் 43 நிர்வாக சேவை அதிகாரிகளை வடக்கில் இணைத்துள்ளோம்.

இவ்வருடம் தெரிவு செய்யப்படவுள்ள தமிழ் பேசும் முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளோம்.

அரச அதிகாரிகள் பிரிவினைக்கு இடமளிக்காமல் இன, மத, பேதமின்றி சகல இனத்தவர்களுக்கும் ஒரே மாதிரியான சேவையை வழங்க வேண்டும்.

இதன்மூலம் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல முடியும். வடக்கில் 10 வருடங்களாக ஒரே இடத்தில் பணியாற்றும் பிரதேச செயலர்கள் தென்பகுதிக்குச் சென்று பணியாற்ற தயாராக இருங்கள். அதேபோல் தென்பகுதியில் உள்ளவர்களும் வடக்கிற்கு பணியாற்ற தயாராக இருக்க வேண்டும்.

வறியவர்களுக்கு சேவையாற்றுவதும் பிரச்சினைகளோடு வருகின்ற மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதே அரச ஊழியர்களின் கடமையாக இருக்க வேண்டும்.

இவ்வாறான சேவைக்கே அரச ஊழியர்களுக்கு இவ் அரசாங்கம் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த கட்சிக்கு கீழாக அரச பணியாளர்கள் கடமையாற்ற வேண்டிய அதேவேளை அரசின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படாமல் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஸ்வர், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் பிரதேச செயலர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ-4)

## கான்ஸ்டபிளுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கொலைக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் உயர் நீதிமன்றம் இந்த தண்டனையை விதித்துள்ளது.

49 வயதான நிர்மலபியதிஸ்ஸஎன்ற பொலிஸ் கான்டபிளே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் குறித்த முச்சக்கரவண்டி சாரதியை சுட்டுக் கொலை செய்துள்ளார்.

கைத்துப்பாக்கி ஒன்றில் சுட்டு முச்சக்கரவண்டி சாரதி ஒருவரை படுகாலை செய்ததாக பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (அ-2)

### அறிவித்தல்

பிரான்ஸ் தற்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தியாகலிங்கம் சிவநேசம் ஆகிய நான் பிரசித்த நொத்தாரிஸ் JE Soussigne Maitre Huot முன்பாக 24.04.2010 திகதியில் நிறைவேற்றப்பட்ட தத்துவப்பத்திரம் மூலம் அதே இடத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் ராஜாராம் என்பவருக்கு கொடுத்த தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்துள்ளேன் என இத்தால் அறிவிக்கின்றேன். குறித்த தத்துவப்பத்திரத்தின் பதிவு யாழ்ப்பாணம் மேலதிக பதிவாளர் நாயகம் அலுவலகம்




நீர்வை அரசகேசரியானை குட்டிக்கும்பிடு



கும்பிடு கும்பிடு குட்டிக் கும்பிடு எங்கள்
கணபதி அப்பனை குட்டிக் கும்பிடு கும்பிடு
தோப்புக்கரணம் போட்டு குட்டிக் கும்பிடு
கும்பிடு கும்பிடு தொப்பை யப்பனை குட்டிக் கும்பிடு

பஞ்ச முகநாதனை சுற்றிவந்து விழுந்து
கும்பிடு கும்பிடு கும்பிடு குட்டிக் கும்பிடு
காதலாகி கசிந்துருகி நின்று குட்டிக் கும்பிடு
பாதமலர் பணிந்து நின்று இருந்து கும்பிடு

பயறப்பம் கடலை மோதகம் விரும்பி உண்பாராம்
பால்தெளி தேன் பாகுபருப்பு ஆனந்தமாக சுவைப்பாராம்
நீர்வையம்பதியிலே அரசகேசரி பிள்ளையார் நாயகராய்
ஒய்யாரமாய் அரசமர நிழலிலே இனிது வீற்றிருப்பாரே

- நீரூர் முருகதாசன்

தீர்த்தத் திருவிழா சிறப்புற வாழ்த்தி வேண்டுவோம்

திருமுருகன் மணி மண்டபம்
பல்பொருள் அங்காடியும்
நீர்வேலி. 0776660211, 021 2230181

ஷாம்பவி பதிப்பகம் மலரி சென்ரர்
நீர்வேலி, யாழ்ப்பாணம்.
0776184425, 021 222 4143



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1970 இந்து(Seddi)<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா :40 சூ,செவ் 4<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/Lகட்டடி ஒப்பந்தக்காரர்<br>தொ.இ:B2224 | பிறப்பு: 1968 இந்து (V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா :25.5 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ:G1111 |
| பிறப்பு: 1978 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:45 செவ்4 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/LUK PR<br>தொ.இ:B2234 | பிறப்பு: 1975 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்திராடம் 4<br>கி.பா :49.5 செவ் 7உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MLT MScMedical Laboratory Technician<br>தொ.இ:G1114 |
| பிறப்பு: 1981 இந்து(Pa)<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா:55செவ் 8உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ:B2306 | பிறப்பு: 1979 இந்து(KO)<br>நட்சத்திரம்:அவிட்டம் 4<br>கி.பா :45 செவ் 7<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L Following Degree முகாமைத்துவ உதவியாளர் விவாகரத்தும் ஏற்கலாம்<br>தொ.இ:G1116 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 4 கி.பா :4.5 உயரம்: 5'7" தகைமை/ தொழில்:BSc, MScManaging DirectorUK<br>தொ.இ:B2309 | பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா :33 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, following Degree ஆசிரியை<br>தொ.இ:G1119 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



SAVE 35,000 in Diploma
ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS
யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரே ஒரு ACCA Gold Approved அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
[ அதி சிறந்த கற்பித்தலுக்கான அங்கீகாரம் ACCA U.K]
K-AIMS
புதிய பிரிவுகள் 24th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்
35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna
JAFFNA 0773 722 104 021 221 9422
COLOMBO 0772 555 814

# வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

### வாக்களிக்கும் முறை

தேர்தல்களை நடத்தி பாராளுமன்றத்திற்கோ, மாகாண சபைக்கோ உள்ளூராட்சி சபைகளுக்கோ மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறை ஜனநாயக நாடுகளில் நடைபெறும் ஓர் அரசியல் செயற்பாடாகும். தேர்தல்கள் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெற்று மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள்ளத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக 1988 ஆம் ஆண்டின் 02 இலக்க மாகாணசபை தேர்தல் சட்டம் ஏற்புடைத்தாகின்றது. இச்சட்டம் மேலும் 1993 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் மூலம் விகிதாசார பிரதிநிதித்துவ முறை தேர்தலுக்கு அறிமுகமாகியது. ஆகவே மாகாண சபைகளுக்கும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலமே பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இலங்கை 9 மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருந்தபோதும் 08 மாகாணங்களுக்கு மாத்திரமே மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டன. வடமாகாண சபைக்கான தேர்தல் இதுவரை (2012) இடம்பெறாமை காரணமாக வடமாகாண சபை அமைக்கப்படவில்லை.

### மாகாண சபை உறுப்பினர்கள்

ஒவ்வொரு மாகாண சபைக்கும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, அந்தந்த மாவட்டங்களின் சனத்தொகை பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் 40 ஆயிரம் குடியிருப்பாளர்களுக்கு ஓர் உறுப்பினர் என்ற வீதத்திலும் ஒவ்வொரு 1000 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்புக்கும் ஓர் உறுப்பினர் என்ற அடிப்படையிலும் தேர்வு இடம் பெறும்.

ஒவ்வொரு மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல மாவட்டங்களினதும் சனத்தொகை, பரப்பளவு அடிப்படையில் கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறைப்படி சகல உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்ட பின் குறித்த மாகாண சபை உள்ளடக்கும் மாவட்டங்களிலும் கூடுதலான வாக்குகளை பெற்ற அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு இரண்டு ஆசனங்கள் போனஸ் ஆக கிடைக்கும். இவ்வாறு இரு ஆசனங்களும் வேட்பு மனுப்பத்திரத்தில் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறாத வேறு இருவரின் பெயர்கள் மூலம் தெரிவு செய்யப்படும்.

### மாகாண சபை உறுப்பினர் எண்ணிக்கை

பல காலமாக இழுத்தடிக்கப்பட்ட வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 16 பேரும் மன்னார் மாவட்டத்திலிருந்து 05 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 05 பேரும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 04 பேரும் வவுனியா மாவட்டத்திலிருந்து 06 பேரும் தெரிவு செய்யப்படுவர். இதன்படி மாகாணத்தின் அதிகூடிய வாக்குகளைப் பெறும் அரசியல் கட்சிக்கு மேலதிகமாக வழங்கப்படும் 02 பிரதிநிதித்துவங்கள் உள்ளடங்கலாக வடமாகாண சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 38 ஆகும்.

### வாக்களிக்கும் முறை

தேர்தலில் வாக்களிப்பது ஒவ்வொருவரினதும் உரிமையாகும். ஆகவே அளிக்கப்படும் வாக்குகள் ஒவ்வொன்றும் எதுவித பிழைகளுமின்றி சரியாக வாக்களிக்கப்பட வேண்டியது எமது பொறுப்பாகும். அளிக்கப்படும் பெறுமதி மிக்க வாக்குகள் வீணடிக்கப்படாது இருத்தல் அவசியம்.

மாகாண சபைக்கான தேர்தலில் வாக்களிக்கும் முறைமை பற்றிய தெளிவான அறிவை ஒவ்வொருவரும் குறிப் பாக பெண்கள் அறிந்து கொள்ள வேண்டும். வாக்களிக்கும் முறைமை பற்றிய தெளிவு, அறிய வேண்டிய ஆர்வம் இன்மையால் பல வாக்குகள் செல்லுபடியற்றதாகிய வரலாறு உண்டு.

### வாக்குச்சீட்டு

வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிக்குச் செல்லும் போது உங்கள் ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்கான தேசிய அடையாள அட்டை, தற்காலிக அடையாள அட்டை, வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் போன்றவற்றில் ஒன்றை தவறாது எடுத்துச் செல்ல வேண்டும்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் வாக்குச்சீட்டில் போட்டியிடும் கட்சி அல்லது குழுக்களின் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

### மாதிரி வாக்குச் சீட்டு

| கட்சி | சின்னம் | புள்ளடி |
|---|---|---|
| 1. ................ | ☐ | X |
| 2. ................ | ☐ | |
| 3. ................ | ☐ | |
| 4. ................ | ☐ | |

[X] [X] [X] 4 5 6 7 8 9 10
11 12 13 14 15 16 17 18 19

இப்படியாக வாக்குச்சீட்டில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள் கட்சி என்று போடப்பட்ட இடத்தில் குறிக்கப்பட் டிருக்கும். அதற்கெதிராக கட்சியின் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். ஆகவே நீங்கள் தெரிவு செய்யும் கட்சிக்கு எதிரே சரியாக புள்ளடி இட வேண்டும். ஒரு வாக்காளர் தான் தெரிவு செய்யும் ஒரு கட்சியின் சின்னத்திற்கு எதிரே மட்டும் புள்ளடியிடவேண்டும். அத்துடன் அக்கட்சி சார்பாகப் போட்டியிடும் மூவரின் இலக்கத்திற்கு மேல் புள்ளடி இட்டு விருப்புத்தேர்வை மேற்கொள்ளலாம். நீங்கள் விருப்பு வாக்கை அளிக்கவுள்ள மூவரின் தெரிவு இலக்கங்களை முன்கூட்டியே தெளிவாக தெரிந்து வைத்திருப்பதன்மூலம் தேர்தல் தினத்தில் ஏற்படும் தடுமாற்றத்தை தவிர்க்க முடியும்.

ஒரு வாக்காளர் ஒரு கட்சியைத் தெரிவு செய்து அவர்களுக்குரிய சின்னத்திற்கு எதிரே புள்ளடியிட வேண்டும். இடப்படும் புள்ளடி பெட்டியின் கோடுகளுள் முட்டாதவாறு இடப் படவேண்டும்.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சியின் சின்னங்களில் [X] புள்ளடியிட்டால் அச்சீட்டு நிராகரிக்கப்படும்.

### விருப்பு வாக்கை பதிவு செய்தல்


மாகாண சபைத்தேர்தலில் ஒருவர் ஒரு குறித்த அரசியல் கட்சியிலோ, குழுவிலோ இணைந்து போட்டியிடும் மூவருக்கு தனது விருப்பு வாக்கையளிக்க முடியும். குறித்த மூன்று விருப்பு வாக்குகளையும் ஒருவருக்கு ஒன்று என்ற ரீதியில் தெரிவு செய்யும் மூவருக்கு வழங்கமுடியும்.


அதாவது அரசியல் கட்சியின் ஒரு சின்னத்திற்கு மட்டும் தனது வாக்கை புள்ளடியிட்டு பதித்த பின் அடுத்ததாக அதே சின்னத்தில் போட்டியிடும் மூவரை தெரிவு செய்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கங்களின் மேல் புள்ளடியிடவேண்டும். நீங்கள் தெரிவு செய்யும் கட்சி, அவர்களது சின்னம், விருப்பு வாக்களிப்பவர்கள் மூவரை தெரிவாக கொள்ளாதவிடத்து ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ அல்லது இலக்கத்திற்கு மேலே புள்ளடியிட முடியும். இதுவும் முறையான வாக்களிப்பில் அடங்கும். மூன்று பேரைத் தெரிவு செய்யவேண்டும்என்பதுகட்டாயமல்ல. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிச் சின்னத்தவருக்குப் புள்ளடியிட்டால் அவ்வாக்குச் செல்லுபடியற்றதாகும்.

அதேபோல விருப்பு வாக்கு இலக்கங்கள் மூன்றுக்கு அதிகமாக புள்ளடியிட்டாலும் விருப்பு வாக்குகள் செல்லுபடியற்றதாகி விடும். ஆனால் ஒரு சின்னத்திற்கு புள்ளடி யிட்டு விருப்பு வாக்கில் மூன்றுக்கு மேற்பட்ட இலக்கங்களுக்கு புள்ளடியிட்டால் கட்சியின் சின்னத்திற்குரிய வாக்கு ஏற்கப்படும். விருப்பு வாக்கு ஏற்கப்படமாட்டாது.

மாகாண சபை தேர்தலில் இவ்வழிமு றைகளைப்பின்பற்றி உரிய நேரத்தில் வாக்குச்சாவடிகளுக்கு சென்று முறையாக வாக் களித்து தங்கள் பிரதேசத்திற்குரிய அரசியல் பிரதிநிதிகளை வடமாகாண சபைக்குத் தெரிவு செய்வதில் உங்களுக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப்பயனுள்ளதாக அமைத்துக்கொண்டுவாக்களிக்கப் பின்னிற்காது பொறுப்புடன் வாக்களிப்பில் கலந்துகொள்வது உங் கள் கடமையும் பொறுப்புமாகும்.

சரோஜா சிவச்சந்திரன்.





வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் தேர் உற்சவம் நேற்று சிறப்பாக நடைபெற்ற போது... (படங்கள்:- தும்பளை செய்தியாளர்)

# அரச சேவையில் இல்லாதோருக்கான ஓய்வூதிய திட்டம் நடைமுறைக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் அல்லாதோருக்கான ஓய்வூதியத் திட்டம் இலங்கை சமூக பாதுகாப்பு சபைமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஓய்வூதியத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் அமுலில் உள்ள போது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படாதிருந்த நிலையில் கிளிநொச்சி அரச அதிபரின் முயற்சியால் கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலுக்கு வந்துள்ளது.

இதுவரையில் இவ் ஓய்வூதியத்திட்டத்தில் 542 பயனாளிகள் இணைந்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இவ் ஓய்வூதியத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி, கண்டாவளை ஆகிய 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கிராம சேவகர் பிரிவுகளினூடாக நடத்தப்பட்டு வரும் அதேவேளை உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர் அல்லாதோருக்கான இவ் ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்து கொண்ட பயனாளிகள் 60 வயது முதல் மாதாந்தம் குறித்த ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

CIMA

அதி சிறந்த வசதிகளுடன் கூடிய
முற்றிலும் மாறுபட்ட முறையில்,
தொழில் சார் கற்கைநெறியில் அனுபவம் உள்ள
விரிவுரையாளர்களுடன் CIMA-UK கற்கைநெறி
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

K-AIMS

புதிய பிரிவுகள் 25th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104 021 221 9422
COLOMBO 0772 555 814

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை அரசு ஏற்றுக் கொள்ளாதது கவலை தருகிறது

## மன்னார் மறை மாவட்ட ஆயர்

(மன்னார்)

எங்கள் தமிழினத்தின் கனவுகள் அபிலாசைகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிப்படுத்தி நிற்கின்றது. இதனை அரசு ஏற்றுக் கொள்ள மறுப்பது கவலையளிப்பதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு தெற்கில் எதிர்ப்பலை வீசுவது தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் நீண்ட காலக்கனவுகள் அபிலாசைகள் எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கியதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் தெளிவாக உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதனைத் தேவையற்ற விதத்தில் பயங்கரவாதமாக மாற்றியமைத்துள்ளனர். மக்களின் உரிமையை ஏற்றுக் கொள்ளாதவர்களின் கருத்துக்களாகவே இருக்கின்றன. அரசே இந்தக் கருத்தை கூறியபோது கவலையளிக்கின்றது.

எங்கள் வரலாற்று உண்மையை நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சரியான நேரத்தில் அது வெளியிடப்பட்டுள்ளது. சட்டத்தை மீறாத வகையில் இலங்கை அரசியலமைப்புக்கு உட்பட்டே தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

உரிமையை மதித்து நடக்கும் போதுதான் இலங்கை முன்னேறும். அதனை விடுத்து தென்னிலங்கை மக்களை உணர்ச்சியூட்டுவதற்காக பிழையான தகவலை வழங்கக் கூடாது என்றும் மன்னார் ஆயர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வேலை நிறுத்த போராட்டம்

(கொழும்பு)

வட மத்திய மாகாண சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஒரு வருடத்திற்கும் அதிகமாக சுகாதார சேவையில் நிலவும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களை அதிகாரிகள் நியமிக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதாக இலங்கைப் பொதுச் சுகாதார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

(அ-2)

# கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் 17 வர்த்தக நிலைய கதவுகள் உடைப்பு

கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள 17 வர்த்தக நிலையங்களின் கதவுகள் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட் டுள்ளது.

கிளிநொச்சி வர்த்தகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ள இச்சம்பவம் கடந்த திங்கள் இரவு இடம்பெற்றுள்ளதுடன் இதன்போது அழகு சாதனப் பொருள் வர்த்தக நிலையங்கள் மற்றும் புடைவைக் கடை என்பனவற்றின் பின் பக்க கதவுகளே உடைக்கப்பட்டுள்ளன.

எனினும் வர்த்தக நிலையங்களில் இருந்த சில பொருட்களும் சிறு தொகைப் பணமுமே திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் கிளிநொச்சியில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் 17 வர்த்தக நிலையங்களின் கதவுகள் மிகவும் துணிகரமான முறையில் உடைக்கப்பட்டுள்ள போதும் பாரிய கொள்ளைச் சம்பவம் இடம்பெறாமல் இருந்துள்ளமை அப்பகுதி மக்களை மேலும் சந்தேகத்துக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை குறித்தசம்பவம் இடம்பெற்றுள்ள பகுதியில் மின்சார இணைப்பு செய்யப்படவில்லை எனவும் இரவு நேரங்களில் இப்பகுதி இருளில் மூழ்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# வடக்கு தேர்தலின் விளைவுகளுக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு

## ஜே.வி.பி தெரிவிப்பு

வடமாகாணசபைத் தேர்தலின் மூலம் ஏற்படக் கூடிய விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டுமென ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கம் ஜனாதிபதி பதவியை பலப்படுத்திக்கொள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்திக் கொண்ட போதிலும் 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்ய அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்திய அழுத்தங்களின் காரணமாகவே வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே அரசாங்கம் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் உணவுப்பொருட்களை வழங்கும் அளவுக்கு அரசாங்கம் இழிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கில் அரசாங்கம் இனமதவாத சிந்தனைகளை தூண்டி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்திற்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்குகளும் ஊழல் மோசடிகளுக்கு ஆதரவாக வழங்கப்படும் வாக்குகளாகவே கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

தேர்தலில் தோல்வியைத் தழுவினால் சகல அபிவிருத்தித் திட்டங்களும் நின்றுவிடும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வடக்கு தமிழ் மக்களை அச்சுறுத்தியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆளும் கட்சியில் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களே முக்கிய பதவிகளை வகிக்கின்றனர் என தெரிவித்துள்ளார். (அ-2)







ஒரு வீட்டின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்று அதன் கூரை என்பதால் நாம் எமது புதிய வீட்டினைக் கட்டும்போது கூரைக்கான மிகச் சரியான மூலப்பொருளைத் தேர்ந்தெடுப்பது அத்தியாவசியமாகும். எமது விநியோகஸ்தரும் தச்சுப் பணியாளரும் 'ராம்கோ' கூரை மற்றும் சீலிங் தகடுகளை தெரிவு செய்யுமாறு எமக்கு ஆலோசனைகளை வழங்கியதையிட்டு, நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எஸ்.எல்.எஸ் (SLS) மற்றும் ஐ.எஸ்.ஓ (ISO) சான்றிதழுடன் கூடிய உயர் தரத்திலான 'ராம்கோ' கூரைத் தகடு உற்பத்திகள் எமது வீட்டை இனியதோர் இல்லமாக மாற்றியுள்ளன.

"சரியானதையே தேர்ந்தெடுங்கள், ஆனந்தமாக வாழுங்கள்"

SLS 9-1 SLS 9-2

Sri Ramco Lanka (Private) Limited
441, SG Arcade, 1st Floor, Sri Sangaraja Mawatha, Colombo 10, Sri Lanka.
Tel. +94(0) 11 2471143 - 44, +94(0) 11 4619949 - 59 Fax +94(0) 11 4619979.

Ramco®
சக்தியின் புதிய அலை

ADcom


(3982)



# சிறுவர் அரங்கம்

579

## யார் சிறந்தவர்?



பட்டிணபுரி மன்னரும் மருதன் தனக்கு ஒருபுதிய அந்தரங்க ஆலோசனைகரை நியமித்துக்கொள்ள விரும்பினான். அதுபற்றி அவன்தன் அமைச்சர் கரியப்பாவிடம் ஆலாசிக்க வந்தான். "அரசே! நம் நாட்டில் அரசியல், பொருளியல், நீதித்துறை, ஆட்சித்துறை, எனப்பல துறைகளில் நன்கு படித்தவர்கள் இருக்கின்றனர். இப்பதவிக்கு அறிவிப்பு செய்தால் அவர்களில் பலர் தங்களைக்காணவருவர். அவர்களுக்குத் தேர்வு நடத்தி நன்கு படித்த ஒருவரைத் தேர்ந்தெடுக்க நாம் பாஸ்கரப்பட்டரின் உதவியை நாடலாம்" என்றார்.

நாடெங்கிலும் பறைசாற்றுவித்து அந்தரங்க ஆலோசகர் பதவிக்கு தகுதி உடையவர்கள் குறிப்பிட்ட ஒருநாளில் தேர்வுக்குவரலாம் என அறிவித்தார். குறிப்பிட்ட நாளில் பல இளைஞர்கள் தேர்வுக்கு வந்தனர். அவர்களுக்கு நடந்ததேர்வில் இரு இளைஞர்கள் முன்னதாக வந்தனர். ஆனால், இருவரும் எல்லவிடயத்திலும் சமமாக இருந்ததால் அவர்களில் யாரை தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்ய அமைச்சரை அணுகினார் மன்னர்.

"இப்பதவிக்கு வெறும் புத்தகப் படிப்பு இருந்தால் மட்டும் போதாது. சிக்கலான பிரச்சினைகளைச் சமாளித்து நல்ல முடிவுகாணத்திறமை பெற்றவராக இருக்கவேண்டும். அவர்கள் இருவருக்கு மட்டும் பரீட்சை வைத்து அதில் தேர்ந்தவனைப் பதவிக்கு நியமியுங்கள்," என்றார்.

மறுநாள் அமைச்சர் இருவரையும் அழைத்து, இன்று காலை என் நண்பரின் உடல் நிலைமிகவும் மோசமாகி விட்டது. அவரது நிலை பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும், எனக் கூறி விவரிக்கலானார்.

என் நண்பர் இன்றுகாலை என்னிடம் கூறியதை அப்படியே கூறுகிறேன். என் நண்பர் வயதானவர். இதய நோயாளி, ஒருநாள் இரவு அவர் பயங்கரமான கனவு ஒன்றைக் கண்டார். அந்தக் கனவில் அவர் ஒரு அடர்ந்த காட்டிற்குள் வழிதவறிப் போய்விட்டார். அவர் ஒரு இடத்தில் நான்கு பாதைகள் சேர்வதைக் கண்டார்.

"மங்கிய இரவில் நட்சத்திர ஒளியில் அவர் அவற்றில் ஒருபாதையை தேர்ந்தெடுத்து நடந்து சென்றார். அங்கு சில சிங்கங்கள் திரிந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று அவரை நோக்கிப் பாய்ந்து வந்தது.

"நண்பர் பயந்து வந்த வழியே ஓடி மறுபடியும்நான்கு பாதைகள் சேரும் இடத்தை அடைந்தார். இரண்டாவது பாதையில் பயமில்லாது நடந்து சென்றார். கொஞ்சதூரத்தில் ஏதோ வெளிச்சம் இருந்து கண்டு அங்கு சென்றார். அங்குபல பாம்புப்புற்றுகள்இருப்பதையும் அவற்றின் மேல்பல பாம்புகள் படமெடுத்து ஆடுவதையும் கண்டார். அவற்றில் ஒன்று ஐந்து தலைநாகம். அவரைக் கண்ட ஐந்துதலைப் பாம்பு சீறவே அவர் பயந்து வந்த வழியே திரும்பி ஓடி மீண்டும் நான்கு பாதைகள் சேரும் இடத்தை அடைந்தார்.

பிறகு அவர் மூன்றாவது பாதையில் நடந்து செல்லலானார். கொஞ்சதூரம் சென்றதும் அது ஒரு மலைஅடிவாரத்தில் போய்முடிந்தது. அங்கு பல மனித எலும்புக்கூடுகள் இருப்பதைக்கண்டு மலைத்து நின்றார். அப்போது அந்த மலையில் ஒருகுகையிலிருந்து பயங்கர ராட்சஸன் ஒருவன் உறுமிக்கொண்டிருப்பதை கண்ட என் நண்பர் பயந்து வந்த வழியே திரும்பி ஓடி மறுபடியும் நான்கு பாதைகள் கூடும் இடத்தை அடைந்தார்.

"இம்முறை அவர் நான்காவது பாதையில் சென்றார். அவர் கொஞ்சதூரம் சென்றதும் தன்பின்னால் ராட்சஸன் வருவது கண்டு பயந்து வேகமாக ஓடினார். அவர் ஒரு பாறையின் விளிம்பை அடைந்துவிட்டார். அங்கிருந்து போக வழியில்லை. பாறையின் கீழ் வெகு ஆழத்தில் தான் நிலப்பரப்பு தெரிந்தது. அவர்ராட்சஸனுக்கு பயந்து நின்ற போதுகால்கள் நடுங்கபாறையிலிருந்து தவறி கீழே படுபாதாள பள்ளத்தில் விழுந்து விட்டார்.

அமைச்சர் தம் நண்பர்கள் கண்ட இக் கனவைக்கூறி, "பார்த்தீர்களா எவ்வளவு பயங்கரமான கனவு என்று! இதயநோயளியான என் நண்பர் இந்தக் கனவைக் கண்டு முடித்ததும் கண்விழ்த்தார். மறுவிநாடியே அவரது இதயத்துடிப்பபு நின்றது. அவர் இறந்து போய்விட்டார்" என்றார்.

அப்போது இருவரில் ஒருவர் பயந்து போய் மெதுவாய்த் தாழ்ந்த குரலில், "கனவில் காணும் காட்சிகள் கூட மனிதனின் உடல் நலனை பாதிக்கின்றன. தங்களது நணபர் நான்கு முறைகளில் பயந்து ஓடி இருக்கிறார். அந்தப்பயம் அவரைப் பெரிதும் பாதித்திருக்கிறது. கண் விழித்ததும் இதயநோயா ளியான அவர் பயத்தால் இதயம் தாக்கப்பட்டு உயிரை இழந்திருக்க வேண்டும். உங்களது நண்பரின் பிரிவால் உங்களுக்கு பெரும்துயரமே ஏற்பட்டுள்ளது,' என்றான். அதைக் கேட்டபின் அமைச்சர் மற்றவரைப் பார்க்கவே அவர் சிரித்தவாறே, "ஆகா! என்ன அருமையான கட்டுக்கதை," என்றான். அமைச்சரும், "கட்டுக்தையா?

ஏன் அப்படிக் கூறுகிறாய்?" என்று சற்று கோபப்பட்டவர்போலக் கேட்டார். "தங்கள் நண்பர் இந்த பயங் கரக்கனவைக் கண்டதும் உடனே கண்விழித்தார் என்றும் மறுவிநாடியே அவரது இதயத்துடிப்பு நிற்கவே அவர் இறந்துவிட்டார் என்று கூறினீர்கள். நீங்களோ உங்கள் நண்பரே இந்தக்கனவை உங்களிடம் கூறியதாகச் சொன்னீர்கள் அது எப்படி முடியும்.?

அவர் தான் கனவைக்கண்டு கண் விழித்ததும் இறந்துபோய்விட்டாரே. அதனால் அவர் எப்படி இந்தக்கனவைத் தாமே உங்களிடம் சொல்லியிருக்க முடியும். முடியவேமுடியாது.அதனால் தான் இது கட்டுக்கதை என்றேன்," என்றான். அமைச்சர் இரண்டாவது நபரை பாராட்டி அவனையே மன்னனின் அந்தரங்க ஆலாசகனாகத் தேர்ந்தெடுத்தார்.


### பஞ்சதந்திரக் கதைகள்

## உடைந்த பானை!

ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத்தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். தண்ணீர் எடுத்துவர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப்பானைகளை ஒரு நீளமான கழியின் இரண்டு முனைகளிலும் தொங்கவிட்டு, கழியைத் தோழில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்குவரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும். குறையில்லாத பானைக்கு தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையை கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும். இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. கேலி பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டது. "ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப்பளு மிகவும் அதிகரிக்கிறது. என்குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரிசெய்யுங்க ளேன்." அதற்குவிவசாயி, "பானையே! நீ ஒன்று கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா?

உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால் தான் வழி நெடுகபூச்செடி விதைகளை விதைத்துவைத்தேன். அவை நீ தினமும் நீ சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்."



இதைக்கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்திவிட்டது. அடுத்தவர் பேச்சைப்பற்றிக் கவலைப்படாமல் தன் வேலையைக்கருத்துடன் செய்யத்தொடங்கியது.

*அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்பட்டால், நாம் எந்த வேலையையும் செய்யமுடியாது.*

# அன்னதானத்தின் பெருமை



ஆன்மீகம் 118

ஆலயங்களில் அன்னதானம் செய்வதற்கு தான, தருமங்கள் கூட்டு வ்ழிபாடு செய்வதற்கே உண்டியல்கள் வைக்கப்பட்டன. அந்த உண்டியல் பணம் பல பேர்களுடைய கர்மங்கள். இதனை அமாவாசை, பௌர்னமி, சிவராத்திரி, பிரதோஷம் போன்ற நாட்களில் கூட்டு வழிபாட்டுடன், ஆலய நிர்வாகி தான தர்மங்களைச் செய்துவன மூலிகையைப்போட்டு யாகங்களை வளர்த்து சித்த புருஷர்களை அழைத்து பூஜை முடிவில் அன்னதானம் செய்வித்தால் ஏதோ பிச்சை எடுப்பது போலவும் பித்து பிடித்தவர்கள் போலவும் அழுக்கு துணியுடன் கையில் தேங்காயுடன் சித்தர்கள், ஞானிகள், ரிஷிகள் வருவார்கள். அவர்களை மனம் கோணாமல் ஆலய நிர்வாகி சிறிதளவு கூட பணத்தாசை இல்லாமல் உண்மையுடன் உபசரித்தால் அவர்களும் பிரசாதம் சாப்பிடுவார்கள். அப்படி பிரசாதம் யாராவது ஒரு ரிஷி சாப்பிட்டால் அந்த ஆலயத்துக்கு எத்தனை பேர்கள் வந்தார்களோ அவர்கள் கஷ்டம், துன்பம், குடும்பப் பிரச்சினை, கல்யாண தோஷம், கடன் தொல்லை, குஷ்டம், புற்றுநோய் போன்ற வியாதிகள் நீங்கி வந்தவர்களுக்கும் வேண்டுதல் செய்தவர்களுக்கும் நன்மை போய்ச்சேரும். அதை விட்டு உண்டியல் பணம் பெருகி வங்கியில் போட்டால் எப்படி கர்மா தீரும். வட்டிக்கு போட்டால் வட்டி குட்டி போடும்.

இப்போது நிர்வாகம் செய்யும் ஆலய அறங்காவலர்கள் போட்டி போட்டுக் கொண்டு பணம் கொடுத்து அறங்காவலர் பதவிக்கு வந்து விபூதி ஊழல், பஞ்சாமிருத ஊழல், கடைவாடகை குத்தகை ஊழல், ஆலயத்திற்கு பசு, ஆடு, கோழி நேர்த்திக்கடன் விட்டால் அதனையும் ஏலம்விட்டு பாவிகள் பாவத்தை சுமந்து இத்தனை



சித்தர் ஆச்சிரமத்தில் அன்னதானம் அளித்தல்

பேர்களுடைய கர்மங்களை இவர்கள் குடும்பம் பிறவி பிறவியாய் அனுபவிக்கிறது. இந்த முட்டாள்களுக்கு இப்போது எது சொன்னாலும் ஏறவே ஏறாது. அதற்கு உதாரணம் சொல்கிறேன்.

நானும் சித்தர் பெருமானும் ஒரு முறை மிக பிரபலமான கோயிலுக்கு சென்றோம். அங்கு இரத்தம், சீவு, சொட்ட குஷ்டரோகி அய்யா என்னைக் காப்பாத்து என்றவுடன் சித்தர் என்னிடம் பணத்தை கொடு சாப்பிடட்டும். பசியாறட்டும் என்றார். ஏன் சுவாமி மனிதன் இவ்வளவு கஷ்டப்படுகிறானே! இறைவன் அவ்வளவு கொடுமைக்காரனா? என்றேன் இல்லை! இல்லை! பிறர் கருமத்தை தரும வழியிலும் ஞானத்திலும் தவத்திலும் செலவு செய்ய வேண்டிய இக்கோயிலின் அறங்காவலரும் பெரிய பண்ணையார் என்று தம் பட்டம் அடித்த தர்ம கர்த்தாவும் என்னையே ஒரு காலத்தில் கேவலப்படுத்தியவனும் தான் இன்று என்னிடம் கையேந்துகிறான். இவன் செய்த கருமாவோடு பிறர் கருமாவையும் சுமக்கிறேன். அதனால் ஆலயத்தில் வருபவர்களிடம் பிச்சை எடுக்க வைத்தான் அந்த இறைவன். மேலே இருந்து அனைத்தையும் ஒருவன் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பதை இப்போது இருக்கும் கோயில் அதிகாரிக்கு நாளை என்ன நடக்க போகுது என்று தெரிந்தால் புனிதமான கோயில் வேலைகளை ஒழுங்காக செய்வான்.

நீதி, தரும தேவதைகள் யார் உள்ளத்தில் குடி கொண்டுள்ளதோ அவர்கள் தான் ஆலயத்தை நிர்வகிக்க வேண்டும். அவர்கள்தான் நிர்வகிக்க முடியும் என்றார். நானும் நல்லவைகளை படித்திருக்கிறேன். அப்படி என்றால் நான் அடைந்திருப்பவர் மலரடியாரே! ஆஹா! என்ன பாக்கியம் என் உள்ளம் துள்ளியது. அன்று இரவு படுக்கப்போகும் நேரம் வரை கும்பிடும்படியான நிகழ்ச்சி எதுவும் நிகழவில்லை.

(தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தனித் தெலுங்கானாவுக்கான போராட்டம் அரசின் பகடைக்காய்களாக மக்கள்...

...கடலோர கிழக்கு மாவட்டங்கள், ராயலசீமா, தெலுங்கானா என மூன்று பெரும் பிராந்தியங்களைக் கொண்டதுதான் ஆந்திரப் பிரதேசம். இதில் தெலுங்கானா பிராந்தியம் ஒப்பீட்டளவில் பெரியது. முன்பு




நிஜாம் சமஸ்தானமாக இருந்த காரணத்தால் தெலுங்கானாவில் பேசப்படும் தெலுங்கில் உருது கலப்பு அதிகமாக உள்ளது. கம்யூனிஸ்டுகள் தலைமையிலான மாபெரும் தெலுங்கானா பேரெழுச்சியைத் தொடர்ந்து, போலி சுதந்திரத்துக்குப் பின் கடுமையான அடக்குமுறைக்குப் பிறகு தெலுங்கானா இந்தியாவுடன் கட்டாயமாக இணைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஆந்திராவின் பிற பகுதிகளைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள், பெரு முதலாளிகளின் ஆதிக்கதாலும் கல்வி, வேலை வாய்ப்பு, அரசாங்கப் பதவிகளில் ஆந்திராவின் பிற பகுதிகளைச் சோர்ந்தோர் பெரும்பான்மையாக இருப்பதாலும் தெலுங்கானா பிராந்தியத்தின் ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினர் மற்றும் மேட்டுக்குடி வர்க்கத்தினர் தனிமாநிலக் கோரிக்கையை இப்பிரச்சினைக்குத் தீர்வாக வைத்துப் போராடி வந்தனர். குறிப்பாக 1969 இல் தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கைக்கான போராட்டம் தீவிரமடைந்து ஏறத்தாழ 300 பேர் கொல்லப்பட்டு கடும் அடக்குமுறைக்குப் பின்னர் அப்போராட்டம் படிப்படியாக நீர்த்துப் போனது.

பின்னர் தனியார்மய- தாராளமயத்தைத் தொடர்ந்து தெலுங்கானா பிராந்தியத்தில் கருங்கல் குவாரி, நிலக்கரி, சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள், வீட்டுமனைத் தொழில், தகவல் தொழில்நுட்பத்துறை, சினிமாத்துறை, காடுகள் முதலானவற்றில் சூறையாடலுக்கான புதிய வாப்புகள் திறந்துவிடப்பட்டதும் ஆந்திராவின் பிறபகுதிகளைச் சேர்ந்த ஆளும் வர்க்கப் பிரிவுக்கும் தெலுங்கானாவின் ஆளும் வர்க்கப் பிரிவுக்குமிடையிலான போட்டா போட்டியின் காரணமாக மீண்டும் தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கைக்கான போராட்டம் 2010 ஆம் ஆண்டில் தீவிர மடையத் தொடங்கியது. அதற்கெதிராக தெலுங்கானாவைப் பிரிக்கக் கூடாது என்று ஆந்திராவின் இதர பகுதிகளில் போராட்டங்கள் நடந்தன. பின்னர் காங்கிரஸ் கூட்டணி அரசு தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்க கொள்கையளவில் ஒப்புக்கொண்டதோடு 2014க்குள் நிறைவேற்றுவதாகவும் வாக்குறுதியளித்தது.

அதன்படியே இப்போது தெலுங்கானா என்ற புதிய மாநிலம் உருவாக்கப்படுவதை ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு உறுதி செய்துள் ளது. பெரிய மாநிலங்களை உடைத்துச் சிறிய மாநிலங்களாக உருவாக்குவதை பா.ஜ.க. ஏற்பதால் தெலுங்கானா தனிமாநிலப் பிரிவினையை ஆதரிக்கிறது. ஜெகன்மோகன் ரெட்டியின் ஒ.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியோ இப்பிரிவினையை எதிர்க்கிறது. தெலுங்கானா பிராந்தியத்திலுள்ள காங்கிரஸ் கட்சியினர் தனி மாநிலப் பிரிவினையை ஆதரிக்கும் அதேசமயம், சீமாந்திரா பிராந்தியத்தின் காங்கிரஸ் மற்றும் தெலுங்கு தேசக் கட்சியினர் இப்பிரிவினையை எதிர்த்து போராட்டங்களை நடத்துகின்றனர். வலது கம்யூனிஸ்ட் கட்சி தனித் தெலுங்கானாவை ஆதரிக்கம் அதே சமயம், மார்க்சிஸ்ட் கட்சியோ பிரிவினையை எதிர்க்கிறது.

தனிமாநில அறிவிப்பைத் தொடர்ந்து கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதி நீரில் கூடுதல் பங்கு கோருவதோடு கடலோர ஆந்திரம் மற்றும் ராமயசீமாவில் பிறந்து தற்போது ஐதராபாத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் அனைவரும் தெலுங்கானா தனி மாநிலம் உருவான பிறகு வெளியேறிவிட வேண்டுமென்று எச்சரிக்கிறார். தெலுங்கானா ராஷ்டிர சமிதியின் தலைவரான சந்திரசேகர் ராவ். அவரது அறிவிப்பை எதிர்த்து, கடலோர ஆந்திரம் மற்றும் ராயலசீமாவின் அரசு அலுவலர்கள் போராட்டங்களில் இறங்கி தெலுங்கானா தனிமாநிலமாகப் பிரிக்கப்படுவதை எதிர்க்கின்றனர். இதனால் இப்பகுதிகளில் அரசு அலுவலகங்



களும் பள்ளி- கல்லூரிகளும் சாலை போக்குவரத்தும் முற்றாக முடங்கிப் போயுள்ளன.

இணையம் (தொடரும்)

# காங்கிரஸை கருவறுக்கவே தேர்தல் வியூகம் வகுப்பேன்

## ம.தி.மு.க. செயலாளர் வைகோ சூளுரை

**(சென்னை)**

**ஈழத்தமிழர் படுகொலையை வேடிக்கை பார்த்துக் கொண்டும் இருந்த அந்தக் கட்சியுடன் எப்படி கூட்டணி வைக்க முடியும்? தமிழினத்துக்குத் துரோகம் செய்யும் காங்கிரஸ் கட்சியைக் கருவறுக்கத் தேவையான வியூகம் அமைத்து தேர்தல் களத்தைச் சந்திப்போம் என ம.தி.மு.க.செயலாளர் வைகோ சூளுரைத்துள்ளார்.**

அண்ணாவின் 105 ஆவது பிறந்த நாள் கடந்த 15 ஆம் திகதி விருது நகரில் கொண்டாடப்பட்டது. இம் மாநாட்டில் நிறைவுரையாற்றிய வைகோ, தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ் ஆகிய கட்சிகளைக் கடுமையாக விமர்சித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும் நாதியற்ற தமிழர்களுக்கும் குரல் கொடுக்க எங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள் என்று மக்களிடம் போய்க் கேட்போம். மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான பி.ஜே. பி.கூட்டணி அரசு அமைந்த போது தமிழர்களின் உரிமைகளை அவரிடம் எடுத்துச் சொல்லி வெற்றி பெற்றிருக்கி றேன்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்காக ஆயுதங்கள் ஏற்றிச் சென்ற இரு கப்பல்களை இந்திய கடற்படையினர் கைப்பற்றினர். இது பற்றி லண்டனில் இருந்து பாலசிங்கம் என்னை தொடர்பு கொண்டு ஏதாவது செய்ய வேண்டும். டில்லியில் வாஜ்பாயை சந்தித்து, இலங்கை இராணுவத்துக்கு சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆயுத உதவி செய் கின்றன. நீங்கள் விடுதலைப்புலிகளுக்கு இராணுவ உதவிகள் செய்யமாட்டீர்கள். ஈழத்தில் தமிழர்கள் கழுத்தை இலங்கை இராணுவம் நெரித்துக் கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள்தான் தமிழர்களுக்கு பாதுகாப்பு அரணாக இருக்கிறார்கள். இப்போது அவர்களது இரண்டு கப்பல்களையும் பிடித்து வைத்துக் கொண்டால், ஈழத்தமிழர்கள் சாக வேணடியதுதான் என்றேன் அந்தக் கப்பல்களை விடுவிக்க உடனே உத்தரவிட்டார்.

பிரதமராக வாஜ்பாய் இருந்த போது இதே இலங்கை இராணுவ உதவி கேட்டது. இது தொடர்பாக மத்திய அரசு அனைத்து கட்சி கூட் டத்தை கூட்டியது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மன்மோகன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ஈழப் பிரச்சினை பற்றியும் தமிழர்கள் படும் இன்னல்கள் பற்றியும் அந்தக் கூட்டத்தில் 18 நிமிடங்கள் பேசினேன். ஈழநிலைமைகளை உணர்ந்த பிரதமர் வாஜ்பாய் இந் திய இராணுவம் இலங்கைக்கு உதவி செய்யாது என்று அறிவித்தார்.

அண்ணாவின் கொள்கைகளை அடமானம் வைத்தும், ஈழத் தமிழர் படுகொலையை வேடிக்கை பார்த் துக் கொண்டும் இருந்த அந்தக் கட்சியுடன் எப்படி கூட்டணி வைக்க முடியும்?

நாடாளுமன்றத்துக்குள் நுழைய வேண்டும் என்பதற்காக எதைப் பற்றியும் கவலைப்படாமல் யாரோடும் கைகோர்க்கக் கூடியவன் அல்ல இந்த வைகோ.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸை குப்பைத் தொட்டியில் வீசி எறிய வேண்டும். நமது இலக்கு எது என்று கேட்டீர்களே ... காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மீண்டும் ஆட்சிக்கு வரக் கூடாது. இதுதான் நமது இலக்கு என முடித்தார் வைகோ. (அ-2)



கரணவாய் வடமேற்கு ஸ்ரீ அம்பாள் மழலைகள் கல்விப் பூங்கா கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி நாடாவைவெட்டி கட்டடத்தினைத் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# கூட்டமைப்பை ஒடுக்குவது அரசுக்கு பெரிய விடயமல்ல

## அமைச்சர் யாப்பா உறுமல்

(கொழும்பு)

பிரபாகரனால் சாதிக்க முடியாததை மேற்கொள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முயல்கிறது. புலிகளை தோற்கடித்த எமது அரசாங்கத்திற்கு இதனை ஒடுக்குவது பெரிய விடயமல்ல என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் அந்தக் கட்சி ஏன் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வரவில்லை என்பது தெளிவாகிறது.

அரசியல் தீர்வொன்று எட்டப்படுவதை அது விரும்பவில்லை என்று கூறிய அமைச்சர் பிரிவினை வாதத்தை ஏற்படுத்த முயலும் த.தே.கூ. தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

ஆயுதம் தூக்க வேண்டியும் வரலாமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது. பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் இது தொடர்பில் செயற்பட வேண்டிவரும். வடக்கு-கிழக்கு இணைப்பு, அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் என புலிகளின் கருத்துக்களை த.தே.கூ. நிறைவேற்ற முயல்கிறது.

வடமாகாண சபையின் அதிகாரத்தை எமக்கு வழங்கினால் வடக்கை மேலும் பலப்படுத்துவோம். ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவே வடக்கில் தேர்தல் நடத்தப்படுகிறது. யாருக்கும் இதில் வெற்றியீட்ட முடியும்.

மீண்டும் பிரிவினைவாதத்திற்கு இடமளிக்க முடியாது. நாட்டின் சட்டத்திற்கும் யாப்பிற்கும் மாற்றமாக யாராவது செயற்பட்டால் அதற்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க பின் நிற்காது. அரசியலமைப்பிற்கு முரணான நடவடிக்கை தொடர்பில் அரசாங்கம்செயற்படும்.

தேர்தல் காலத்தில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தால் சர்வதேச சமூகத்திற்கு தவறான தகவல் தெரிவிக்கப்படும் என்றார். (அ-2)

# அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பங்களாதேஷிலிருந்து இறக்குமதி

இலங்கைக்குத் தேவையான மருந்து வகைகளை பங்களாதேஷில் இருந்து தருவிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பங்களாதேஷ் சுகாதார அமைச்சர் பேராசியர் ருஹால் ஹக்குடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதோடு, எதிர் வரும் ஒக்டோபர் மாதத்தில் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இலங்கைக்கு மருந்து விநியோகிக்கும் 4 இந்திய கம்பனிகளை சுகாதார அமைச்சு அண்மையில் தடை செய்தது. இவை இடைக்கிடை தரக்குறைவான மருந்து வகைகளை விநியோகித்து வந்ததையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந் நிலையில் குறித்த மருந்து வகைகளை பங்களாதேஷிலிருந்து தருவிப்பது குறித்து சுகாதார அமைச்சர் மைதிரிபால சிறிசேன பேச்சு நடத்தி வருகிறார்.

உலக சுகாதார ஸ்தாபன தென் கிழக்காசிய நாடுகளுக்கான மாநாடு புதுடில்லியில் நடைபெற்றது. இலங்கை சார்பாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலகவும் பங்கேற்றனர்.

இலங்கைக்கு தேவயையான மருந்துகளை பங்களாதேஷிலிருந்து தருவிப்பது குறித்து இதன்போது ஆராயப்பட்டது. இதன்படி மருந்து தருவிப்பது தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையில் ஒக்டோபர் மாதத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். (அ-2)

# சுதந்திர வர்த்தகத்தில் சீனா–இலங்கை ஒப்பந்தம்

(கொழும்பு)

சீனாவுடன் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் கைச்சாத்திடவுள்ளது.

ஆசியாவில் எந்த நாட்டுடனும் சீனா நூறு வீதம் தீர்வையற்ற சுதந்திர வர்த்தகத்தில் ஒப்பந்தம் செய்ய முன்வைந்தது கிடையாது என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கைக்கு உதவும் நாடுகளில் சீனா முக்கிய இடத்தில் உள்ளது. சீனாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எந்தெந்த பொருட்களை இதில் உள்ளடக்குவது என ஆராயப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தினூடாக இலங்கை பொருட்களை சீனாவுக்கு வரியின்றி ஏற்றுமதி செய்ய வாய்ப்பு ஏற்படும்.

ஏனைய ஆசிய நாடுகளுடன் சீனா 100 வீதம் முழுமையான வரியற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது கிடையாது. (அ-2)

# சேது சமுத்திர தடைக்கு எதிரான விசாரணை நவம்பர் மாதத்திற்கு

சேதுசமுத்திரதடைக்குஎதிரானவழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திர திட்டத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி மத்திய அரசு மனுத்தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் ஒத்துவைத்துள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்தால் இராமர் பாலத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் அந்தத்திட்டத்தைசெயற்படுத்தக்கூடாது எனக் கூறி தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் கடந்த ஏப்ரல் மாதம் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை சுப்ரமணியன் சுவாசி, விஸ்வ ஹிந்து பரிஷத் உள்ளிட்ட அமைப்புகளும் தாக்கல் செய்தன. அதற்கு பதில் அளிக்குமாறு , மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. இந்நிலையில் சேது சமுத்திர திட்டம் தொடர்பாக மத்திய அரசு உச்ச நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை பதில் மனு தாக்கல் செய்தது.

அதில் திட்டமிட்டபடி சேது சமுத்திரத்திட்டத்தை மத்திய அரசு செயற்படுத்தவுள்ளதாக கூறப்பட்டுள்ளது. திட்டத்துக்கு எதிரான வழக்குகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட் டது.

இதில் மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவுக்கு பதிலளிக்க வழக்கை தொடர்ந்தவர்களில் ஒருவரான சுப்ரமணிய சுவாமி கால அவகாசம் கோரியதால் விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாத இறுதிக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். (அ-2)

# இலங்கை மீனவர்கள் இந்திய எல்லையில் கைது

(தூத்துக்குடி)

இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேரை கடலோர பொலிஸார் கைது செய்து படகை பறிமுதல் செய்துள்ளனர் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

தூத்துக்குடி பகுதியிலுள்ள கடலோர பொலிஸார் கொமாண்டோ ஆனந்தகுமார் தலைமையில்,கடல் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

கன்னியாகுமரியில் இருந்து 75 கடல் மைல் தொலைவில், இலங்கை மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்து கொண்டிருந்ததால், கடலோர காவல் படையினர் படகினை மடக்கினர்.

படகில் இருந்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேரை கைது செய்தனர். படகை பறிமுதல் செய்து தூத்துக்குடிக்கு கொண்டுவந்துள்ளதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நாட்டை நேசிப்பவர்களே தலைவர்களாக முடியும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டை அன்பு செய்யாதவர்களை மக்கள் ஒருபோதும் நாட்டின் தலைவர்களாக்க விரும்பமாட்டார்கள் என்றும் நாட்டை நேசிப்பவர்களாலேயே உலகை வெல்ல முடியும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஆனமடுவ தொகுதியில் மஹிந்தோதய பாடசாலைக் கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அன்பையும் கருணையையும் உலகிற்கு எடுத்துக்கூறிய வரலாற்றைக் கொண்ட நாடு இலங்கையென அவர் இதன்போது தெரிவித்தார்.

லண்டன் பற்றியும் அமெரிக்கா பற்றியும், பெருமையாக பேசுபவர்களால் நாட்டை நேசிக்க முடியாது. நாட்டை நேசிப்பவர்களால் தான் பெரியோராகவும் தலைவராகவும் முன்னேற முடியும். கிராமங்களையும் உலகத்தையும் வெல்ல முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

எம்மைக் கொல்ல வந்தவர்களுக்கும் உணவளித்து விடுதலை வழங்கியவர்கள் நாம். ஒருபோதும் எந்த நாட்டினதும் வளங்களையும் உரிமையையும் அபகரித்த வரலாறு எமக்குக் கிடையாது.

நாட்டை அன்பு செய்யாத ஒருவரை மக்கள் நாட்டின் தலைவராக்க விரும்பமாட்டார்கள். எமது தாய் தந்தையர்களை, கவனிக்காமல் மனிதம், கருணை பற்றி பேச முடியாது. பிள்ளைகள் பிறந்த நாட்டின் மீது பெருமைகொள்வதுடன் நாட்டை நேசிப்பது அவசியம். அவ்வாறு செயற்படுபவர்களது வாழ்வில் என்றும் எதிலும் தோல்வியில்லை.

நாம் உலகிற்கு அன்பின் மகத்துவத்தைக் காட்டியவர்கள். எந்த நாட்டினதும், எவரதும் வளங்களை உரிமைகளை நாம் அபகரித்ததாக எந்த வரலாற்றிலும் கிடையாது. மற்றவர்களைத் துன்புறுத்திய வரலாறு எமக்குக் கிடையாது. எமது நாட்டை ஆண்ட அரசர்கள் வேறு மதங்கள் இந்த நாட்டிற்கு வந்தபோது அந்த மதத்தினர்களைப் பாதுகாத்தனர். அவர்களை அன்பு செய்தனர். அதுவே எமது பரம்பரையின் பண்பும் நட்பும். எம்மைத் தாக்கவந்தவர்களையும் ஆதரித்தவர்கள் நாம்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின்போது 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் எம்மிடம் சரணடைந்தபோது எமது பாதுகாப்புப் படையினர் தம்மிடமிருந்த தண்ணீர்ப் போத்தலையும் உணவுப் பொதியையும் அவர்களுக்கு வழங்கி உபசரித்தனர். அத்தகைய கருணை படைத்த படையினர் எம்மிடமுள்ளனர். இறுதி மனிதாபிமான நடவடிக்கையின்போது ஒரு பக்கம் படையினர் மீது தாக்குதல் நடந்தபோதும் மறு பக்கம் படையினரின் இந்த நேசம் வெளிப்பட்டது. அவ்வாறு சரணடைந்த புலிகள் அனைவரையும் நாம் தற்போது விடுதலை செய்துவிட்டோம்.

எம்மைக் கொல்ல வந்தவர்களையும் கருணை காட்டி உணவு வழங்கி விடுதலை பெற்றுக்கொடுத்தவர்கள் நாம். இது இன்று நேற்றல்ல எமது மூதாதையர் பரம்பரையிலிருந்து தொடர்ந்து வெளிப்பட்ட பண்புகள் இவை.

பெற்றோர்கள் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். பிள்ளைகளே நமது செல்வம், அந்த செல்வங்களைப் பாதுகாத்து முன்னேற்ற வேண்டியது நம் அனைவரினதும் பொறுப்பாகுமென ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ-2)

# உள்நாட்டில் தயாரிக்கப்படும் பக்றீரியாக்களால் நட்டம்

(கொழும்பு)

டெங்கு கட்டுப்பாட்டுக்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பி.ரி.ஐ. பக்றீரியா பயன்பாட்டை நிறுத்துவது தொடர்பில் கொழும்பு மாநகர சபை அவதானம் செலுத்தி வருகின்றது.

குறித்த பி.ரி.ஐ. பக்றீரியாக்களை பயன்படுத்துகின்றமை காரணமாக வருடாந்தம் 12 மில்லியனுக்கும் அதிகமாக செலவிடப்பட்ட போதும் உரிய பிரதிபலன் கிடைக்கவில்லை என்று மாநகர சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது உள்நாட்டு பக்றீயாக்களுக்கு பதிலாக வேறு முறைமைகளை பயன்படுத்துவது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தின் அதிகாரிகளுடன் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2)

# தேர்தல் வன்முறைகள் மேலும் அதிகரிக்கலாம்

## கபே அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் சட்ட வரைமுறைகளை மீறிய மற்றும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட 129 பேர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அவற்றுள் அதிகமான முறைப்பாடுகள் மத்திய மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் அவற்றின் எண்ணிக்கை 163 எனவும் பொலிஸார் தேர்தல் நடவடிக்கைப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாகாண சபைகளின் தேர்தல் நாளை மறுதினம் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் வன்முறைகள் மேலும் அதிகரிக்கக் கூடிய அபாயம் இருப்பதாக கபே அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்று வருவதாக கபே அமைப்பு கூறுகிறது.

போலி இலக்கத் தகடுகள் அடங்கிய வாகனங்கள் மற்றும் பழுதுபார்த்த நிலைய இலக்கங்கள் கொண்ட வாகனங்களின் பாவனை அதிகரித்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மற்றும் புத்தளம் மாவட்டங்களில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி வேட்பாளர்களின் வாகனங்கள் தாக்கப்பட்டதுடன் முறையற்ற வகையில் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக கபே அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதுதவிர குருநாகல் மாவட்டத்திலும் அதிகளவில் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக இலங்கை பயணித்துள்ள தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்பின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் தமது கண்காணிப்பு செயற்பாடுகளை வட மாகாணத்தில் ஆரம்பித்ததாகத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. (அ-2)

# தேர்தல் கடமைக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

வடக்கு மாகாண சபைத் தேர்தல் உட்பட மூன்று மாகாணங்களுக்கான தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் இந்த மாகாண சபைத் தேர்தலில் கடமையாற்றவுள்ள அரசாங்க அதிகாரிகளுக்கு கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளது என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல்கள் திணைக்கள ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவினால் விடுக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் கடமையாற்றவுள்ள கிராம சேவையாளர்கள் மற்றும் வாக்களிப்பு நிலையத்தில் பணிபுரியும் முகவர்கள் ஆகியோருக்கு கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவையாளர்களுக்கு முன்னர் நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவு தற்போது ஆயிரத்து 250 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் திணைக்கள ஆணையாளரினால் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# இந்தியாவும் கனடாவும் மாநாட்டில் கலந்து கொள்ளும்

## அமைச்சர் பீரிஸ் உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் இந்தியா, கனடா ஆகிய நாடுகள் கலந்து கொள்வது உறுதி செய்யப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்தியா, கனடா ஆகிய நாடுகளின் பங்குபற்றுதல் உறுதி செய்யப்பட்டுள்ள போதும் அந்நாட்டு அரசாங்கங்கள் சார்பில் யார் இலங்கை வருவரென்பதனை திட்டவட்டமாக கூறமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளதாக கூறப்படும் ஒப்பந்தங்களில் எவ்வித உண்மையுமில்லையெனவும் அமைச்சர் மறுப்புத் தெரிவித்தார்.

கனேடிய செனற் உறுப்பினர் ஒருவர் அண்மையில் இலங்கை வந்த பொதுநலவாய முன்னோடிக் குழுவில் அங்கம் வகித்திருந்தார்.

இவர் தமது நாடு பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமென்பதனை உறுதி செய்திருந்த அதேநேரம் இறுதி தறுவாயில் கலந்து கொள்ளும் பிரதிநிதியை அறிவிப்பதாக கூறிச் சென்றார் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் இந்தியாவும் கனடாவும் பங்குபற்றுவதில் இழுபறி நிலை காணப்படுவதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட வினாவுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவற்றை தெரிவித்தார். (அ-2)


# அவசரமாக தரை இறங்கிய ஹெலி

இந்தியாவைச் சேர்ந்த நடிகர்களை ஏற்றிக் கொண்டு கொழும்பிலிருந்து பயணித்த உலங்குவானூர்தி தொம்பே மகளிர் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து கொக்கலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த உலங்குவானூர்தியே சீரற்ற காலநிலை காரணமாக இவ்வாறு தரையிறக்கப்பட்டதாக தொம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

சீரற்ற காலநிலைக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய உலங்கு வானூர்தியை கொழும்பிலிருந்து வரவழைத்து கொக்கலைக்கு பயணத்தை தொடர்ந்ததாக பயண ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது. (அ-2)

# இறைமையுள்ள தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைக்கான மீள் வாக்கெடுப்பா இது?





தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் இரண்டு விடயங்கள் குறித்து, ஊடகப் பரப்பில் அதிகமாகப் பேசப்படுவதை காண்கிறோம். ஒன்று வேட்பாளர்கள் மீதான தாக்குதல்கள், இரண்டாவது, கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து, தென்னிலங்கையில் எழும் விமர்சனங்கள்.

இதில் முதலாவது, விடயத்தை நோக்கினால் பிரசாரக் கூட்டங்களுக்கு தடை போடப்படுகிறது என்கிற பொதுவான குற்றச்சாட்டுகளைவிட வேட்பாளர் மீதான நேரடித் தாக்குதல்களும் வீட்டின் வாசலில் கழிவு எண்ணெய் அபிசேகம் செய்வதுமே முக்கிய அச்சுறுத்தலாக பார்க்கப்படுகிறது.

சூழலியலாளர் ஐங்கரநேசனின் காரியாலய வாசலிலும் இந்த எண்ணெய் அபிசேகம் நடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும், தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனின் துணைவியார் அனந்தி வாக்குச் சீட்டில் முதலாவது இடத்தில் (எண்1) இருக்கிறார். முதன் முதலாக இவர்மீதுதான தாக்குதலும் நிகழ்த்தப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரையை முடித்து வீடு திரும்பும் வழியில், ஐந்து சந்தியில் வைத்து அனந்தி எழிலனின் மீது கல் வீச்சுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. வடக்கில் வசந்தம் வீசுகிறதோ இல்லையோ கல்வீச்சு மட்டும் ஒழுங்காக நடைபெறுகிறது.

இவை தவிர தேர்தல் மேடைகளில் சோறா... சுதந்திரமா? அபிவிருத்தியா... அதிகாரப்பகிர்வா? என்கிற பட்டிமன்றங்களுக்கும் குறைவில்லை.

இரண்டாவது விவகாரத்தை எடுத்துக்கொண்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் பற்றியே பெளத்த சிங்கள கடும்போக்குவாதிகளும் ஆளும் தரப்பினரும் அதிகமாகப் பேசுகின்றனர் என்கிற யதார்த்தம் புரியும்.

அண்மைக்காலமாக 13வது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவர வேண்டுமென்று ஒரு சாராரும், இல்லை அறவே அதனை ஒழிக்க வேண்டும் என்று இன்னொரு சாராரும் அறிக்கைப் போரில் ஈடுபட்டதைக் காணலாம். ஒரு வழியாக அந்த விவாதமும் தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதோடு அடங்கிவிட்டது.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக, தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்கிற அழுத்தம் மேற்கிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வந்ததால் தவிர்க்க முடியாமல் வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது.

அப்படியொரு அழுத்தம் வரவில்லை என்பதைச் சிங்கள மக்களுக்கு காட்டவே ஏனைய இரண்டு மாகாணங்களில் தேவையற்ற தேர்தலை நடாத்துகின்றது அரசு.

மாகாணசபை உருவாக்கத்திலும் இதுதான் நடந்தது. தமிழ் அரசியல் அமைப்புகளாலும், பெரும்பாலான விடுதலைப் போராட்ட இயக்கங்களாலும் 13வது திருத்தச் சட்டம் நிராகரிக்கப்பட்டாலும் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை முறைமையினை தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக இந்தியா முன்வைத்தது.

இந்தியாவின் அழுத்தங்களால் தமிழ் மக்களுக்கென்று தனியான தீர்வினை வழங்கிவிட்டோம் என்று சிங்கள தேசம் எண்ணிவிடக்கூடாது என்பதற்காகவே சகல மாகாணங்களிலும் மாகாணசபைகளை உருவாக்கினார் ஜே.ஆர் ஜெயவர்த்தன. தென்னிலங்கை மக்கள் கேட்காத சபை அது.

ஆனாலும் இன்னொரு வகையில் பார்க்கும் போது தமிழ் தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ளாத, அத்தேசத்திற்கு Nation இறைமையுண்டு என்பதை நிராகரிக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் வட- கிழக்கிற்கென்று தனியான சபைகளை உருவாக்க முடியாது என்பதால் எல்லா மாகாணங்களிலும் சபைகள் உருவாக்கப்பட்டது என்பதுதான் நிஜம்.

மாகாணசபைத் தேர்தலுக்காக கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதப்பட்ட விடயம் குறித்து சிங்கள கடும்போக்குவாதிகள் துள்ளிக் குதிக்கிறார்கள்.

ஒஸ்லோ பிரகடனக் கதைகள் குறித்த விவாதத்தில் அவர்கள் ஈடுபடவில்லை. தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்திடம் இதுபற்றி பேசிய பேராசிரியர் ஜி.எல். பீரிசும் அதனை எப்போதோ மறந்துவிட்டார். அடிப்படையில் உறுதியாக இருந்தவாறு எதனையும் ஆலோசிப்பதற்குத் தயார் என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாக அன்று இருந்தது.

அதேவேளை பிரபாகரனின் கொள்கையை தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பின்பற்றுகிறது என்று எதன் அடிப்படையில் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச கூறுகின்றார் என்பதைப் பார்க்க வேண்டும்.

நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் தேர்தல் விஞ்ஞாபனம் இதுவென்று கூறி, வழக்குப்போட முற்படும் சட்டத்தரணிகள் சங்கத்தின் நியாயப்பாடு, அரசியல் அமைப்பு சட்டத்தின் அடிப்படையில் எழுப்பப்படுகிறது.

ஆனாலும், விஞ்ஞாபனத்தில் உள்ள சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய தேசம் என்கின்ற சொல்லாடல் 83-ல் கொண்டு வரப்பட்ட 6வது திருத்தச் சட்டத்திற்கு முரணானது என்று விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்ற பெளத்த சிங்கள கடும்போக்காளர்கள் போர்க்கொடி தூக்குவார்கள்.

ஆங்கிலத்தில் Nation (தேசம்) என்று இருந்தது, தமிழில் தேசியமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், அதைச் சிங்களத்தில் வாசித்த விமல் வீரவன்ச எப்படிப் புரிந்திருப்பார் என்று தெரியவில்லை. அது எவ்வாறிருந்தாலும், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட Nation என்கிற சொல்லையே அனைத்துலகமும் உள்வாங்கிக்கொள்ளும்.

ஆனாலும், சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை கைவிடச் சொல்லும் அனைத்துலக நெருக்கடிக்கான குழு (International Crisis Group) இதனை எவ்வாறு சகித்துக் கொள்ளும் என்கிற கேள்வியும் எழுகின்றது.

அதேவேளை தாங்கள் குறிப்பிடுவது, பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை அல்ல, உள்ளக சுயநிர்ணய உரிமையை என்பது போன்ற புதிய விளக்கங்களும் கூட்டமைப்பு வட்டாரங்களில் இருந்து வருவதைக் கவனிக்க வேண்டும்.

6வது திருத்தச்சட்டமானது, உள்ளக சுயநிர்ணயக் கோரிக்கையை அனுமதிக்குமா என்பதல்ல இங்கு பிரச்சினை. வட-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், ஒரு இறைமையுள்ள பூர்வீக தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ளாத அரசியல் அமைப்பில், உள்ளக உரிமைகளை எப்படி எதிர்பார்க்க முடியும்? என்பதே விவாதத்துக்குரிய முக்கிய விடயமாகும்.



தற்போதைய அரசியல் அமைப்பில் அதனை உள்வாங்கி, மாற்றங்களை செய்யாமல், பகிரப்பட்ட இரு தேசங்களின் இறைமையின் அடிப்படையில், அதிகாரப் பகிர்வு பொறிமுறை ஒன்றினை நிறுவ முடியாது.

ஆகவே, தேர்தல் பிரகடனத்தில் குறிப்பிட்ட, ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமை என்கின்ற அடிப்படைப் பிறப் புரிமையை சிங்களத்திற்கு ஏற்றவாறோ அல்லது சில சர்வதேச நாடுகளுக்கு ஏற்ற வாறோ மாற்றியமைக்காமல், அடுத்தகட்ட அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள இந்த விவகாரத்தை வைத்து, வடமாகாண சபையைக் கலைக்க, வட-கிழக்கைப் பிரித்த ஜே.வி.பியே, உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

ஒற்றையாட்சி மற்றும் சிங்கள தேசத்தின் முழுமையான நாட்டிறைமை என்கிற மேலாதிக்க கருத்துருவத்திற்கு அச்சுறுத்தல் எந்த வடிவத்தில் வந்தாலும், அதனை பெரும்பான்மை இனத்தின் அனைத்து கட்சிகளும் சேர்ந்தே எதிர்க்கும் என்பதுதான் இலங்கையின் வரலாறு. ஆதலால், இதனைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற தேர்தல் கால எழுச்சி, நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டங்களிலும் உருவாக்கப்பட வேண்டும்.

ஏனெனில் 13-வது திருத்தச்சட்டத்தில் உள்ள சிறிய அதிகாரங்களைக்கூட மாகாணசபைக்கு அரசு வழங்காது. வரதராஜப் பெருமாளின் வரலாற்று அனுபவங்கள், நிகழ்கால அரசியல் தளத்தில் திரும்பவும் வரப்போகிறது.

இந்தியாவின் பூரண ஆதரவோடு, பக்கபலத்தோடு, இணைந்த வட-கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராகவிருந்த வரதராஜப்பெருமாளால், ஈழப் பிரகடனத்தை மட்டுமே செய்ய முடிந்தது.

பின்னர் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட ஆயுத இயக்கமே, அந்த அடிப்படை பிறப்புரிமையை 2009 வரை கொண்டுசென்றது என்கிற உண்மையை மறக்க முடியாது.

-இதயச்சந்திரன்-

# இலங்கையை மட்டும் உலக நாடுகள் கவனிப்பது ஏன்?

## கொதிக்கிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

**சர்வதேச சக்திகளுக்கு நாட்டை குழப்ப இடமளிக்கமுடியாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நாடு என்ற ரீதியில் மிகவும் கடினமான முறையில் வென்றெடுத்தவற்றை பாதுகாக்க மக்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை காரியாலயத்தில் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கல ந்து கொண்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தலைவரை மக்கள் புடை சூழ்ந்து கொண்டுள்ளனர். சர்வதேச சக்திகள் நாட்டுக்கு எதிராகச் செயற் படுகின்றனர். ஜனாதிபதியுடன் மக் கள் இருக்கின்ற வரையில் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற் படுத்த முடியாது. சர்வதேச தலை யீடுகள் காரணமாக உலகின் பல நாடுகளில் குழப்ப நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

உலகின் எந்தவொரு நாடும் பயங் கரவாதத்தை இல்லாதொழிக்கவி ல்லை. எனினும் தமிழீழ விடுத லைப் புலி பயங்கரவாதத்தை எமது நாடு இல்லாதொழித்துள்ளது.

ஆறு மாதத்திற்கு ஒரு தடவை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேர வையில் இலங்கை விவகாரம் விவா தம் செய்யப்படுகின்றது. உலகின் வேறு நாடுகளில் முக்கியமான பிரச் சினைகள் இடம்பெறவில்லையா?

போர்க்காலத்தில் திரட்டப்பட்ட பணத்தை புலம்பெயர் தமிழர்கள் தற்போது தங்களது இருப்பை உறுதி செய்துகொள்ள பயன்படுத்திக்கொள் கின்றனர்.

இதேவேளை, இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித் நாளை வெள்ளிக்கிழமை இலங்கையின் வெளியு றவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸை சந்திக்க வுள்ளார். அத்துடன் அவுஸ் திரே லியா, ஈரான் போன்ற நாடுகளின் அமைச் சர்களையும் அவர் சந்திப்பதோடு அந்நாட்டின் வெளியுறவு அமைச் சர்களையும் சந்திக்கவுள்ளார்.

புதுடில்லியில் நடைபெறும் இந்து சமுத்திர ஒத்துழைப்பு மாநாட்டுக்கு புறம்பாக இந்தச் சந்திப்புக்கள் இடம் பெறவுள்ளன. (அ-2)

# இலங்கை தொடர்பில் கனடா புதிய சட்டம்

இலங்கையர்கள் தொடர்பில் கனடா புதிய சட்டங்களை அமுல் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இலங்கை உள்ளிட்ட சில நாடு களின் பிரஜைகள் தொடர்பில் பயோ மெற்றிக் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இதன்படி கனடா விசா கோரும் குறித்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் கைவிரல் அடையாளங்களையும் புகைப்படத்துடன் சமர்ப்பிக்க வேண் டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் விசா அல்லது ஏனைய விசாக்களுக்கும் இது பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் இலங்கையர்கள் உள்ளிட்ட சில நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் விசா விண்ணப்பிக்கும் போது கைவிரல் அடையாளங்களை யும் விண்ணப்பத்தில் உள்ளடக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள் ளது. (அ-2)

# பால்மா டி.சி.டி பரிசோதனை தொடர்ந்தும் இடம்பெறும்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து அண் மைக்காலமாக இறக்குமதி செய்யப் பட்ட பால்மாக்களில் டி.சி.டி. எனப்ப டும் அதிபூரதம் இருந்தமையால் அவை இலங்கை சந்தையில் இருந்து நீக் கப்பட்டன.

இருந்த போதும் பின்னர் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் டி.சி.டி. அற்றதாக அறிவிக்கப்பட்ட பால்மாக்கள் விடு விக்கப்பட்டன.

இந்நிலையில் இறுக்குமதி செய் யப்படும் பால்மா வகைகளில் டி.சி.டி. இரசாயன பதார்த்தமுள்ளதா என துறைமுகத்தில் தொடர் பரிசோ தனை செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பரிசோதனைகளின் பின்னரே அவை சந்தைக்கு விநியோகிக்கப் பட வேண்டும் என உணவு ஆலோ சனை குழு பணித்துள்ளதாக அவ்வ மைப்பு தெரிவித்துள்ளது.

இதுபற்றி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உரிய அதி காரிகளுடன் கலந்துரையாடியுள் ளார்.

டி.சி.டி. பரிசோதனைக்கு உட் படுத்தப்படாத பால்மா வகைகள் சந்தைகளில் இருக்குமாயின் அது குறித்து ஆராய்ந்து அவற்றை அக ற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும் என அந்த கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் உணவு பாதுகாப்பு கருதி பரிசோதனைகளை நேர்த்தியாக மேற்கொள்வதற்கென வைத்திய பரிசோதனை நிலையத்திலுள்ள வச திகளை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ-2)

# துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர் கைதானார்

(கொழும்பு)

சண்டே லீடர் ஊடகவியலாளர் சௌகத் அலி மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் துப்பாக்கிச் சூட் டின் பின்னர் மற்றுமொரு குற்றச் செயலுக்காக அவிசாவளை சிறை யில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததா கத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர். துப்பாக்கிச் சூட்டுக்கான கார ணம் குறித்து பொலிஸார் சந்தேக நபர்களிடம் விசாரணை நடத்தி வரு கின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி சௌகத் அலி மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தத் துப்பாக் கிச் சூட்டு சம்பவத்தில் சௌகத் அலி காயமடைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ-2)

# கூட்டமைப்புடனான உறவு குறித்து அரசாங்கம் விமர்சிக்கக் கூடாது

## ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையி லான உறவுகள் குறித்து பேச அர சாங்கத்துக்கு அதிகாரம் இல்லை என்று அக்கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் முன்னாள் தலைவர்கள் மீது எவ்வித சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் எடுக்காது அவர் களுடன் கூட்டுவைத்துள்ள அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உறவு கொண்டிருப் பது குறித்து கேள்வி கேட்க முடியாது.

அரசாங்கம் முன்னாள் விடுதலைப் புலிகளை தேர்தல் பிரசாரங்களிலும் பயன்படுத்தி வருகிறது.

தேர்தல் முடிவுகள் குறித்து மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளை கண்டு அரசாங்கம் பயப்படுகிறது. எனவே, தான் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது வீண் பழியை சுமத்தி வருகிறது.

இதேவேளை, சுதந்திர சதுக்கத்தில் இருந்து முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் உருவச்சிலையை அகற்றுமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை கோரியதாக அரசாங்கம் வெளியிட்ட தகவலும் பொய்யானது என அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# விக்கியின் திட்டம் இங்கு பலிக்காது

## பொதுபல சேனா கர்ஜிப்பு

முப்பது வருடங்களுக்கு முன் னர் இருந்த வடமாகாணமே எமக்கு வேண்டும். பிரிவினைவாதத்தினை நாம் தோற்றுவிக்கவும் இல்லை. பிரிவினைக்கு இடமளிக்கப் போவது மில்லை. மேலும் விக்னேஸ்வர னின் திட்டம் ஒருபோதும் பலிக்கப் போவதில்லை என பொதுபல சேனா தெரிவித்துள்ளது.

பொதுபல சேனாவினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்படி ருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே குறித்த அமைப்பினர் மேற்கண்ட வாறு கருத்துத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செய லாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரபாகரன் வடக்கின் தீவிரவாத முன்னணியாகவும் உருத்திரகுமா ரன், அன்ரன் பாலசிங்கம் ஆகி யோர் புலம்பெயர் தமிழர் முன்ன ணியாகவும் செயற்பட்டுள்ளனர்.

அதே வழியில் இன்று நவநீதம் பிள்ளை சர்வதேசம் சார்பாகவும் விக்னேஸ்வரன் பிரிவினைவாத முன்னணியாகவும் செயற்பட்டு வரு கின்றனர்.

அன்று விடுதலைப் புலிகள் செய்யமுடியாததை இன்று நவிப் பிள்ளை, விக்னேஸ்வரன் செய்ய முயன்றாலும் அதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்க போவதில்லை என்றார். (அ-2)




- ❖1356 - லண்டன் "போல்ட்டியேர்" என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரான்சை வென்றது.
- ❖1658 -யாழ்ப்பாணத்தில் உரோமன் கத்தோலிக்க மத குருமாரை மறைத்து வைத்திருப்பது மரணதண்டனைக்குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.
- ❖1862 -அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் மிசிசிப்பியில் இடம்பெற்ற போரில் கூட்டமைப்பினரைத் தோற்கடித்தனர்.
- ❖1870 -பிரான்சுக்கும் புரூசியாவுக்கும் இடம்பெற்ற போரில் பாரிஸ் நகரைக் கைப்பற்றும் நிக ழ்வு ஆரம்பமானது. பாரிஸ் 1871 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 இல் புரூசியா விடம் வீழ்ந்தது.
- ❖1881 - ஜூலை 2இல் சுடப்பட்டுப் படுகாயமடைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்ஃபீல்ட் இறந்தார்.
- ❖1893-சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.
- ❖1893 -நியூசிலாந்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடானது.
- ❖1942-மேற்கு உக்ரைனில் புரோடி என்ற இடத் தில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 500 யூதர்கள் நாசி வதைமுகாமுக்கு அனுப்பப்பட்டனர்.
- ❖1944 -பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றிய த்துக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.
- ❖1952-ஐக்கிய அமெரிக்கா சார்லி சப்ளின் லண்டன் சென்றுவிட்டுத் அமெரிக்கா திரும்புவதற்குத் தடை விதித்தது.
- ❖1957-ஐக்கிய அமெரிக்கா நிலத்துக்கடியே தனது முதலாவது அணுகுண்டுச் சோத னையை நடத்தியது.
- ❖1983-சென் கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஐக்கிய இராச சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- ❖2006 - தாய்லாந்தில் இராணுவப் புரட்சியில் இராணுவத் தளபதி சோந்தி பூன்யா ரத்கிலின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

**பிறப்புகள்**

- ❖1911 - வில்லியம் கோல்டிங், இலக்கியத்துக் கான நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய நாவலாசிரியர் (இ. 1993)
- ❖1965-சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீராங்கனை

**இறப்புகள்**

- ❖1881 - ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்கா வின் 20 ஆவது குடியரசுத்தலைவர் (பி. 1831)
- ❖1980 - கே. பி. சுந்தராம்பாள், தமிழிசை, நாட கக் கலைஞர் (பி. 1908)

# அறிவியல் தொழில் நிபுணர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையில் விரிசல்கள் ஏற்படுகின்றனவா?

அறிமுகம்

அறிவியல் வளர்ச்சி என்பது மக்களின் வாழ்க்கை மற்றும் எண்ணம், உறவுகள், பண்பாடு போன்ற எல்லாத்துறைகளிலும் வேகமாகப் பரவி வருகின்றது.

அறிவியல் தொழில் வல்லுநர்களும் ஆராய்ச்சியும் மருத்துவ சாதன உற்பத்தி நிறுவனங்களும் உலகம் முழுவதும் மிகப் பெரிய அளவில் அதிக வலுவுடன் வளர்ச்சி பெற்று வருகின்றன. பண்பாட்டியலிலும் சமுதாயவியலிலும் பல புதிய அபாயங்களை, கருவில் சுமந்துள்ள பாரிய முன்னேற்றங்களை அவை கட்டாயமாக திணிக்கின்றன.

இதில் அறிவியல் தகவல்கள் மீது அறிவியல் நிபுணர்களுக்கு கட்டுப்பாடற்ற ஏகபோகம் இருக்க வேண்டுமா? பாதிக்கப்படுவோருக்கு இதில் பங்கேற்கும் உரிமை ஏதுமில்லையா?

திடீரென வெளிப்படும் கதிரியக்க பொருட்களினால் ஏற்படும் அபாயங்களை அதனைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் குடும்பத்தைப் பாதிப்பதில்லை. எல்லை கடந்து எங்கோ வாழும் பாமர சனங்களை தலைமுறை தலைமுறையாக பாதிக்கிறதே!

இந்த பின்னணியில் அறிவியல் தகவல்களின் உரிமை, கட்டுப்பாடு, பகிர்வு பற்றி இன்று கலந்துரையாடுவோம்.

அறிவியல் தகவல்கள்

விஞ்ஞானம் அல்லது அறிவியல் குறித்த அபாய உணர்வு எல்லா நாடுகளிலும் பரவலாக வளர்ந்து வருகின்றது. வளர்ந்து விட்ட நாடுகள் கூட இவைபற்றிய பல அபாயங்களைப் ''பேசாப் பொருளாக'' பராமரித்து வருகின்றன.

உயிர்க் கூற்றியல் சார்ந்த அறிவியலில் பல அசாதாரண முன்னேற்றங்கள் வேகமாக நிகழ்கின்றன. அப்போது விடை தேடப்பட வேண்டிய அவசரமான வினாக்கள் பல எழுந்து நின்று அச்சுறுத்துகின்றன.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களின் விளைவுகள் இறுதியில் சமுதாய விளைவுகளாகவே முடிவடைகின்றன.

அறிவியல் வளர்ச்சி பற்றிய பார்வையை சில வரையறைக்குள் பார்க்க வேண்டிய தேவைகள் நிமிர்ந்து நிற்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் போர்கள் என்பவை பெரிதும் பொருளாதார அடிப்படையில் நிகழும் போர்களாகவே தென்படுகின்றன. நாடுகளின் பொருளாதார முன்னேற்றங்களின் போக்கு, உறுதிப்பாடு என்பவற்றில் அறிவியல் சார்ந்த அறிவு, தொழில்நுட்பம் பற்றிய தகவல்கள் அதிக ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

அறிவியலை எம்மை நெருக்கடிகளிலிருந்து விடுவிப்பதற்கான பேராற்றலாக பார்க்க வேண்டுமேயன்றி எம்மைத் துன்பச் சகதிக்குள் மீண்டும் மீண்டும் தள்ளிவிடும் மானிட துன்பியலாக நோக்குதல் கூடாது. அது ஆபத்தானது.

உலகின் வளர்ச்சிப் போக்கில் தென்படுகின்ற புதிய காட்சி வளர்ந்த நாடுகளுக்கும் வளர முயற்சிக்கின்ற வறிய நாடுகளுக்குமிடையிலான ஏற்றத்தாழ்வு அறிவியல் ஏற்றத் தாழ்வுடன் பிணைக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது.

வறுமையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய ஏக்கம் நிறைந்த மக்கள் கூட்டம் விளிம்பு நிலையில் உள்ளபோது வறிய நாடுகள் அறிவியல் வளர்ச்சியில் தமது வளங்களை ஒதுக்க வேண்டியது அவசியம் தானா என்ற கேள்வி முனைப்புடன் காணப்படுகின்றது.

வறுமையைக் கலைத்துவிடும் வலிமை கொண்ட பல மனிதாபிமான உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளை உருவாக்கி விடும் உள்ளடங்கிய ஆற்றல் அறிவியல் வளர்ச்சிக்குண்டு.

பல வளர்ச்சிமுக நாடுகளில் உற்பத்தித்துறைகளுடன் இணைந்ததான ஆராய்ச்சிகள் எதுவுமேயில்லை. தமது தேசிய வருமானத்தில் ஒரு சதவீதத்தைக்கூட தொழிற்றுறை ஆராய்ச்சிக்கென ஒதுக்காத பல வறிய நாடுகள் உள்ளன.

பெரும்பாலான வளர்முக நாடுகளில் கைத்தொழிற்றுறை இரசாயனவியல் Industrial Chemistry பற்றி எத்தகைய அக்கறையும் காணப்படுவதில்லை. மறுபுறம் நன்கு வளர்ந்து விட்ட நாடுகள் சமாளிக்க முடியாத அளவு பேரிடர்களைத்தரக் கூடிய மிகப் பெரிய ஆராய்ச்சி நிலையங்களை நிர்வகித்து வருகின்றன. பல சமயங்களில் வளர்முக நாடுகளில் அவற்றை நிறுவி விடுகின்றன. அபாயம் வளர்முக நாடுகளுக்கும் ஆராய்ச்சியின் நலன்கள் வளர்ந்துவிட்ட நாடுகளுக்கும் பகிரப்படுகின்றன. செல்வத்தை உருவாக்கும் அறிவியல் துறை ஒரு அகன்று போகாத சுமையாக பல நாடுகளில் வளர்ந்து செல் வதையும் அவதானிக்க முடிகிறது.

புதிய அணுகுமுறைகளுக்கான பசி

அறிவியல் தொடர்பாக புதிய உபாயங்களை உருவாக்க வேண்டியதும் சர்வதேச அளவில் இணக்கப்பாடு மற்றும் ஒத்துழைப்பு முயற்சிகளை வளர்க்க வேண்டியதும் அவசியமாகியுள்ளது.

அறிவியல் மகாநாடுகள், பங்களிப்பு கூட்டங்கள், வெளியீ டுகள், வலையமைப்புக்கள், புதிய செய்திப் பரவல்கள், தகவல் தொழில்




நுட்ப தொடர்புகள் என்பவற்றின்மூலமாக எல்லா நாடுகளினதும் ஆராய்ச்சிகளை சரியாக ஒன்றிணைத்து அறிவியலை அனைத்துலக குக்கும் உரியதாக்க வேண்டும் என்ற கருத்தை (ஜார்ஜஸ். பி. குதுக்தியான் 1998) தெளிவாக வலியுறுத்தி வந்துள்ளார்.

ஆய்வு கூடங்களின் வழியாக வெளிவரும் புதிய அறிவுகளுக்கும் வாழ்கின்ற பொது மக்களுக்குமிடையில் தொடர்புகளும் புரிந்துணர்வும் தேவையில்லையா?

அறிவியலில் பெறப்படும் புதிய ஆய்வு முடிவுகள் பற்றி அறிந்து கொள்ளும் உரிமை நேரடியாகவோ மறைமுகமாகவோ அவற்றுக்கு நிதிவளம் வழங்கும் பொதுமக்களுக்கு உண்டு.

இன்று அவைபற்றி போதிய அறிவின்மை, நம்பிக்கையின்மை, விபரிக்க முடியாத அச்ச உணர்வு என்பன பரவி வருகின்றன. இதற்கு முக்கியமான காரணம் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் பெரும்பாலும் மனி தர்களை மதிக்கப்படக்கூடிய ஜீவன்களாக கருதுவதேயில்லை.

எமது நாட்டிலும் பொதுமக்களின் வரிப்பணத்தில் இலவசக் கல்வி கற்று மருத்துவர்களாக கல்வி மற்றும் தொழில் முறையில் வளர்ந்தவர்களில் சிலர் சிகிச்சைக்குட்படும் நோயாளருடன் நோய்பற்றி உரையாடுவதை அவமானமாக எண்ணுகிறார்கள். அவர் களை ஏதோ புழு பூச்சிகளைப் பார்ப்பது போல் பார்க்கிறார்கள்.

அறிவியல் கல்வி சமுதாய மென்மை உணர்வுகளைச் சாகடித்து விட்டனவோ என்று மௌனமாக மக்கள் கோபப்பட்டுக் கொண்டு தானிருக்கிறார்கள். அதை வெளிப்படுத்துவதற்கான முரட்டுத்தனமான உபாயங்களை இன்னும் அவர்கள் தெரிவு செய்யவேயில்லை.

நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், தகவல் அறியும் உரிமை என்பவற்றுடன் மருத்துவம் போன்ற அறிவியல்துறை மற்றும் இத் துறைகளில் அறிவியலை தொழிலாக பிரயோகிப்போர் தொடர்பான தீமைகள், பாரபட்சம், நேர்மையீனம் தொடர்பான பொதுமக்களுடனான கருத்தாடல்களை ஊடகங்களும் சன சமூக நிலையங்களும் முன்னெடுக்க வேண்டும். பயனாளிகளான பொதுமக்களுக்கு தம்மைப் பாதுகாப்பதற்கான சுதந்திர வாயில்கள் திறக்கப்பட வேண்டும்.

கோவில் மந்திரங்கள்போல் மருத்துவ மற்றும் அறிவியல் விளைவுகளையும் கண்ணை மூடிக்கொண்டு பொதுமக்கள் மௌனமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. இது நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்பதற்கான அறிகுறிகளும் இல்லை.

இதேநிலை பெருமளவில் நிகழும் பொறியியல் மற்றும் கட்டுமானப் பணிகளும் நிகழ்வதாக வளர்முக நாடுகள் பலவற்றின் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய மருத்துவம், பொறியியல், உயிர்நுட்பவியல் போன்ற பொதுமக்களை நேரடியாக பாதிக்கும் துறைகளில் பிணைந்து

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

கிடக்கும் அபாயங்களை கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டுமென்று பொதுமக்கள் விரும்புகிறார்கள்.

அறிவியல் தகவல்களும் பொதுமக்களும்

அறிவியல் தகவல்கள், அரசியல் தகவல்கள் போல் தேவைப்படுகின்ற எல்லா மக்களையும் சென்றடைவதில்லை. அரசியல் அறிவைப் பரப்புவதில் உள்ள சமுதாய வேட்கை அறிவியல் தகவல் தொடர்பாக வளர்முக நாடுகளில் வளரவேயில்லை.

எல்லோரும் எல்லா நேரமும் அரசியலை மாத்திரம் பேசுவது நீண்டகால உறுதியான முன்னேற்றத்துக்குப் போதுமானதா? அதுவும் தேவை. ஆனால், பொருளாதாரம், அறிவியல் தொடர்பான தகவல்களும் செயற்பாடுகளும் பொதுமக்கள் வாழ்வைக் கோரமாக பாதிக்கக்கூடியன.

ஒளிவுமறைவு இன்மை, உண்மை, நம்பிக்கை என்ற இம்மூன்றும் அறிவியல் தகவல் தொடர்பாக மிக முக்கியமானவை என்று பொதுமக்கள் வலுவாக நம்புகின்றனர். ஒளிவு மறைவின்மையை அறிவியல் தொழில் நிபுணர்கள் இயல்பான வாழ்விலும் பொது மக்களுடன் இணைந்த தொழில்களிலும் அனுசரிப்பதற்கு நீண்டகாலம் செல்லும் போல் தென்படுகின்றது. அதுவரை பயனாளி களான நோயாளர்களும் பொதுமக்களும் சில சமயங்களில் தமக்கு நேரக்கூடிய அறிவியல் துன்பங்களுக்கு பணம் கொடுத்துக் கொண்டு தானிருக்கப் போகிறார்கள். இதுவும் ஜனநாயக உரிமையோ!

அறிவியலில் பொய்யான தகவல்களும் அரைகுறையான உண்மைகளும் பொதுமக்களிடையே வதந்திகளை வளர்க்கும். அறிவியல் தொழில் நிபுணர்கள் பற்றிய சமுதாய நற்பெயர் மெல்ல மெல்ல கெட்டுப்போகும். பொதுமக்களுக்கும் அறிவியல்துறை சார்ந்த தொழில் வாண்மையினருக்குமிடையில் தகவல் தொடர்பாக சமூகவியல் உரிமையும் கடப்பாடும் கூட உள்ளடங்கியிருக்கின்றன என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

பக்கச் சார்பின்றி அறிவியல் செய்திகளை வழங்கும் போது பொதுமக்களும் பொறுப்


பேராசிரியர் மா.சின்னத்தம்பி

புடன்தான் நடந்து கொள்கிறார்கள். நம்பிக் கை மிகுந்த சமுதாய உறவுகள் இங்கு வளரும் போது எதிர்பார்க்க முடியாத நேச உணர்வுகளும் புதிய படைப்புத் திறன்களும் தூண்டப்படுகின்றன என்கிறது யுனெஸ்கோ நிறுவனம்.

இத்தகைய அறிவியல் தகவல்களின் பரப்புகை தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச நெறிமுறைகளும் வழிகாட்டும் கொள்கைகளும் உள்ளன. இதனடிப்படையில்தான் பல நாடுகளில் மனிதர்கள் மீது மருத்துவ பரிசோதனைகளை நடாத்துதல், மருந்துகளை சோதித்தல் தொடர்பான பாராளுமன்றச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1997 ஆம் ஆண்டில் உயிரியலிலும் மருத்துவத்திலும் ஆராய்ச்சிக்கும் ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்துவதற்கான தார்மீக நெறிகளையும் விதிமுறைகளையும் வகுப்பதற்கான மகாநாடு நடைபெற்றது. 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி யுனெஸ்கோ நிறுவனம் மனித இனம் மற்றும் மனித உரிமை பற்றிய உலகளாவிய அறிக்கை ஒன்றையும் இந்த மகாநாட்டு முடிவில் வெளியிட்டிருந்தமை இங்கு கவனிக்கத்தக்கது.


முடிவுரை

அறிவியல் சார்ந்த மருத்துவம், பொறியியல், உயிர்நுட்பவியல், மின்பொறியியல், நுண்தொழில்நுட்பவியல் என்பன எப்போதும் உண்மையின் இருப்பிடங்களாக இருப்பதில்லை. சரியாகவும் உறுதியாகவும் நிகழப் போவதை மாத்திரம் இந்த அறிவியல்கள் சொல்வதில்லை. மற்றொரு ஆய்வுகள் இவை சார்ந்த முடிவுகளை பிழை என்று நிறுவும் வரை தான் இவை சரியானவை. அறிவியல் அடிக்கடி தனக்குத்தானே எச்சரிக்கை மணியடித்து சவால் விட்டுக் கொண்டுதானிருக்கின்றது. சந்தேகம்– உறுதிப்பாடு என்பவற்றுக்கிடையிலான சமநிலையில்தான் அறிவியலின் அறநெறி இருக்கின்றது என்பதை உணர வேண்டும்.

மனிதனை மாத்திரமன்றி பெருமளவான தொழில்நுட்ப ஆதார வளங்களிலும் அறிவியல் அதிகமாக தங்கியுள்ளது.

அறிவியல் உருவாக்கம், பொது மக்கள் மீதான அறிவியலின் பிரயோகம் என்பன தொடர்பாக மனித இனத்தின் நலன் தொடர்பாக அறநெறிப்படியான கட்டுப்பாடுகளை சட்டமும் சமூகமும் மேலும் அதிகமாக உருவாக்க வேண்டும். பொதுவிவாதங்கள் இவை சார்ந்து ஊக்குவிக்கப்பட வேண்டும்.

நம் எதிரே மிகப் பெரிய அறிவியல் கலந்துரையாடலுக்கான சாலை நீண்டு செல்கிறது. நம்பகமான அறிவியல் தகவல்களுடனும் அறநெறிகளுடனும் பயணம் செல்லாவிடில் பெரிய விபத்துக்கள் காத்திருக்கின்றன.



பாம்பணைமேல் பள்ளி கொண்ட மாயவனே...!
அதர்மத்தை வேரறுத்து தர்மத்தைக் காத்திடையா...!!

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் தீர்த்தோற்சவ சிறப்பு மலர்

(வியாழக்கிழமை - 19.09.2013)

## மச்சாவதாரியாக வந்து வல்லியின் மடியில் குழந்தையாகிய கண்ணன்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம் 04.09.2013ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்திருவிழாக்களில் முக்கியமானதும் சிறப்பாக விளங்குவதும் சமுத்திர தீர்த்த திருவிழாவாகும். இத்திருவிழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கூடுவார்கள். இத்திருவிழா இன்று நடை பெறுகின்றது. இன்று மாலை எம்பெருமான் கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தம் ஆடுவதற்கு செல்வார். பக்தர்கள் சூழ்ந்திருக்க மாயவனின் சக்கரத்தை கற்கோவளம் பக்தர்கள் மாயவா, வைகுந்தா, சங்கு சக்கரம், நாராயணா, கண்ணா கோவிந்தமலையை கையிலே கொண்டு எனக் கோசங்களை எழுப்பியவாறு காவிச் செல்வார்கள். கற்கோவளம் கடலில் சந்திரன் உதயமாகும் போது மாயவனின் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். இக்கண்கொள்ளாக்காட்சியை காண்பதற்கு மக்கள் சமுத்திரம் திரண்டிருக்கும். சமுத்திர தீர்த்தத்திற்கும் வல்லிபுரக்கோயில் தோன்றியமைக்கும் சரித்திரவரலாறு கூறுவதாவது, கற்கோவளம் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருப்பவர்களின் வலைகளில் மீன் ஒன்று பிரவேசித்து வலைகளைப் பிய்த்து கோலாகலமாக துள்ளிவிளையாடியது.

இக்காட்சியை ஆனந்தத்தோடு மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். மீன் பிடித்தவர்கள் ஆத்திரமுற்று மீனை பிடிக்க முயன்றனர். ஆனால் அம்மீன் பிடிகொடாது எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக ஒரு பெண்ணின் மடியில் வீழ்ந்தது. அப்பெண் 'லவல்லி' எனும் பெயர் உடையவராவார். அப் பெண்ணின் மடியில் இருந்த மீன் பிள்ளைபோல் தோன்றியது. லவல்லியும் சந்தோசமடைந்து அப்பிள்ளையை அணைத்தபடி ஒரு மரநிழ லில் அமர்ந்து அப்பிள்ளையை சயனிக்க செய்தார். பின் ஒரு பல்லக்கில் வைத்து லவல்லி எனும் வல்லி நாச்சியுடன் அப்பிள்ளையை தாங்கிச் சென்றனர். களைப்படைந்த அவர்கள்களைப்பாறுவதற்கு ஒரு இடத்தில் பல்லக்கை இறக்கினார்கள். மீண்டும் செல்வதற்கு பல்லக்கை தூக்கமுடிய வில்லை. அவர்கள் பல்லக்கை ஆச்சரியத்துடன் பார்த்தபோது குழந்தை சக்கரமாகக் காட்சியளித்தது. எல்லோரும் மாயவனின் சக்கரத்தை வணங்கினார்கள். அன்று தொட்டு இன்றுவரை இந்நிகழ்வை குறிக்கும் முகமாக சமுத்திர தீர்த்த திருவிழா கற்கோவளம் மக்களால் நடத்தப்படுகிறது.

த.ஜெயரூபன், கணக்காய்வாளரும் வருமானவரி ஆலோசகரும், கற்கோவளம்.

## பிரதி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

பரித்ராணய ஸாதூநாம்
விநாசாய சதுஷ்க்ரதாம்
தர்மஸம்ஸ்தாப நார்த்தாய
ஸம்பவாமி யுகே யுகே-
பகவத்கீதை: அத் 4.சுலோ 8

தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் போது தர்மத்தை காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் நான் யுகம் தோறும் யுகம் தோறும் அவதரிக்கிறேன்.

இன்று வல்லிபுர ஆழ்வார் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காத்தல் கடவுளாகிய ஸ்ரீமகாவிஷ்ணு ஸ்ரீ வல்லிபுரம் எனும் புராதன பதியிலே ஸ்ரீ சுதர்சன வடிவில் எழுந்தருளியிருக்கும் இவரை சக்கரத்தாழ்வார் என்றும் அழைப்பர். சக்கரத்தாழ்வார் ஸ்ரீ நரசிம்மமூர்த்தியின் அம்சமானவர். ஸ்ரீநரசிம்மமூர்த்தி தனது நாமத்தை உச்சரிக்கும் பக்தனை காத்தருள தூணிலே தோன்றியவராவார். இச்சம்பிரதாயத்தில் வந்த ஸ்ரீ வைஷ்ணவர்களை தமக்கு துன்பம் நேருகையில் ஸ்ரீசுதர்சன ஆழ்வாரின் தோத்திரங்களை பாராயணம் செய்வர். இதேபோன்று ஸ்ரீவல்லிபுரநாதனும் தன்னை நாடிவரும் பக்தர்களின் துயர்போக்கி அருளுகின்றார்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடி வருகின்ற இத்தினத்தில் நாமும் அவரது புகழைப் போற்றி துதித்தால் எமது இடரும் களையப்படும் என்பது திண்ணம். இன்று வியாழக்கிழமை பௌர்ணமி தினத்தில் அந்தி சாயும் போது சக்கரத்தாழ்வாராக வங்கக் கடலில் தீர்த்தம் ஆடும் எம்பெருமாள் அனைவருக்கும் இன்னருள் புரிவாராக.

திரு.பாலசுந்தரம் சிவாஜி
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

## சங்கடங்கள் தீர்க்கவல்ல சமுத்திர நாயகனே வருக

வளம் மிக்க வல்லிபுர மண்ணினிலே
வந்தோரை வாழ வைக்கும் வல்லிபுர ஆழ்வாரே- வருக வருக
ஆழ்கடல் மீதினிலே ஆனந்தமாக தீர்த்தம் ஆடிட
அற்புத ராஜாவே அலைகடல் நோக்கி- வருக வருக
அலைகடல் மீதினிலே தீர்த்தம் ஆடி- தீமைகள் தீர்க்கவல்ல
சமுத்திர நாயகனே சனத்திரளில் மிதந்து- வருக வருக
சமுத்திர நாயகனாக வரும் போதே வந்தோர்க்கும்
வையகத்தில் வாழ்வோருக்கும் வாரி வாரி
அருள் புரிந்திட ஆனந்தமாக விரைந்து வருக

ஆர்.எஸ்.பகீரதன்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## பறந்தோடி வருவாய் நீயே

கருநீல நிறமேனிக் கண்ணா என்று
காத்தருளும் தெய்வமுனைப் போற்றுகின்றோம்
பெருமானே வல்லிபுரப் பதியில் நின்று
பாம்பணையிலே துயின்று படியளக்கும்
திருமாலே! அலங்காரப் பிரியனான உந்தன்
நீராடுங் காட்சிதனைக் காண விரும்பும்
பாருளோர் மகிழ பரந்தாமா!
பாற்கடல் வண்ணா!
பறந்தோடி வருவாய் நீயே

த.ஜெயரூபன்,
கற்கோவளம்.

**இன்று வங்கக் கடலில் நீராடிவரும் மாயவனின் அருள் பார் எங்கும் கிடைக்க வேண்டி நிற்போர்**


நவீன வடிவமைப்புக்களில் தரமான 22 கரட் நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
**சுசீலா ஆபரணமாளிகை**
இல.258, பிரதானவீதி, பருத்தித்துறை
தொ.பே.: 021 226 3064
கிளை I
**நியூ சுசீலா ஆபரணமாளிகை**
இல.228, பிரதான வீதி, பருத்தித்துறை
தொ.பே.94212264154

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
**தரன் நகை மாளிகை**
ம.மா.வி.வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 321 9254
கிளை I **தரன் நகை மாளிகை**
பிரதான வீதி, பருத்தித்துறை.
கிளை I ஸ்தாபனம் முற்றிலும் மாறுபட்ட நகைகளின் காட்சியறை. வெகுவிரைவில் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
**மகாலட்சுமி தங்க மாடம்**
இல.93, பிரதான வீதி,
நெல்லியடி
தொ.பே.021 321 4577

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
**வைஷ்ணவி - நகைப்பூங்கா**
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.021 226 4519

**RAJ RESTAURANT**
**ராஜ் ரெஸ்ரோரன்ஸ்**
Luxury Rooms with king size bed
A/C & NON A/C
Holl for Ceremonies
பரந்தன் வீதி,புதுக்குடியிருப்பு
தொ.பே:.021 320 8377
0772367422

**ABI MOTORS**
**அபி மோட்டோர்ஸ்**
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
தொ.பே.021 226 2757

**நியூ குமாரி களஞ்சியம்**
நவீன சந்தை,
பருத்தித்துறை.
தொ.பே.021 226 3288

**பெரியாழ்வார் ஆச்சிரமம்**
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
"பார்த்தனுக்கு பாடம் சொன்ன
மூர்த்தன் வருகிறான்
பசித்தவர்க்கு விருந்தளிக்க அமுது
கொணர்கிறான்"

# வடக்கு மாகாண சபை தேர்தலில் பாரிய மோசடி இடம் பெறலாம்

## சார்க் பிரதிநிதிகளிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

**நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ள உயர் அதிகாரிகளில் பெருமளவானவர்கள் சிங்களவர்களாக நியமிக்கப்பட்டுள்ளமையால் தேர்தலில் பாரிய மோசடி இடம்பெறும் என்ற அச்ச நிலையைத் தோற்றுவித்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்க் நாடுகளின் தேர்தல்கள் கண்காணிப்பாளர்களிடம் முறையிட்டுள்ளது.**

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மாகாண சபைத் தேர்தல்களைக் கண்காணிப்பதற்காக இலங்கைக்கு வருகைதந்துள்ள சார்க் நாடுகளின் தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் குழு நேற்று வவுனியாவிற்கான பயணத்தினை மேற்கொண்டது.

இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை வேட்பாளர்களான ஜி.ரி.லிங்கநாதன், வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம ஆகியோர் தேர்தல் கண்காணிப்புக்குழுவினரை சந்தித்தனர்.

இச் சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

மூன்று மாவட்டங்களிலும் தேர்தல் நடவடிக்கைக்காக நியமிக்கப்பட்டுள்ள உதவி தெரிவத்தாட்சி அலுவலர், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள் போன்ற தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அதிகாரிகள் பெருமளவில் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாவட்டங்களில் தகுதி வாய்ந்தவர்கள் இருந்தும் அவர்கள் உள்வாங்கப்படவில்லை.

தேர்தலில் ஆளுந்தரப்புக்கு ஆதரவான செயற்பாடுகளில் இராணுவத்தரப்பு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. ஆளுங்கட்சி சார்பு நிகழ்வுகளுக்கு மக்களை அழைத்துச் செல்வது, வாக்குறுதிகளை வழங்குவது, கூட்டமைப்புக்குச் சார்பாகச் செயற்படுவோரைக் கட்டுப்படுத்துவது உட்பட்ட செயற்பாடுகளில் இராணுவத்தினர் மிகத் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றமையை சுட்டிக்காட்டினோம்.

வாக்குகளை அபகரிக்கும் அதே வேளை, மக்களை மிரட்டியமை தொடர்பிலும் விளக்கினோம். குறிப்பாக வன்னியில் பல பகுதிகளில் தேர்தல் தினத்தில் அசம்பாவிதங்கள் நிகழலாம் என்றும் என்றும் ஆதரவு தெரிவிக்க மறுத்த பொதுமக்கள் மிரட்டப்பட்டுள்ளதாக பொது மக்கள் மத்தியில் அச்சம் நிலவுவதையும் வள்ளிபுனத்தில் ஆளுந்தரப்பு ஆதரவு தெரிவிக்க மறுத்த குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளமை குறித்தும் தெரிவித்தோம்.

அரச உயர் அதிகாரிகள் தொடக்கம் ஊழியர்கள் வரையில் அரச பணியாளர்கள் ஆளுந்தரப்பிற்கு சார்பான தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் அரச உதவிகளைப் பெறும் மக்களை அச்சுறுத்தி அவர்களிடம் இருந்து வாக்குகளை அபகரிக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றமை தொடர்பிலும் தெரிவித்திருக்கின்றோம்.

குறிப்பாக சில கிராமங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணங்களைப் பெற்றுவருகின்றன. குறித்த குடும்பங்களைச் சந்திக்கும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஆளுந்தரப்புக்கு வாக்களித்தால் மாத்திரமே தொடர்ந்தும் உதவிகள் கிடைக்கும் என மிரட்டல் விடுத்துவருகின்றனர்.

அதேவேளை, பின்தங்கிய கிராமங்களில் வாக்குச்சீட்டுக்களை பணம் கொடுத்து பெறப்படும் நடவடிக்கை தொடர்பிலும் எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக வவுனியா வடக்கு கனகராயன்குளம் பிரதேசத்தில் உள்ள பெரியகுளம் என்ற வறிய மக்கள் செறிந்து வாழும் கிராமத்தில் வாக்குச் சீட்டுக்கள் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் என்ற அடிப்படையில் பணம் கொடுத்து மக்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளன.

இவ்வாறான பல்வேறு நடவடிக்கைகள் நீதியான தேர்தலுக்கு எதிரான வகையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறான பெருமளவான சம்பவங்கள் தொடர்பில் இலங்கையின் தேர்தல்கள் திணைக்களம், மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களிடம் பல்வேறு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அதேவேளை, வாக்களிப்பின் போதோ அல்லது வாக்கு எண்ணும் போதோ பாரிய மோசடி நடைபெறலாம என்ற அச்சம் நிலவுவதாக தாம் சார்க் தேர்தல்கள் கண்காணிப்புப் பிரதிநிதிகளிடம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (அ-ம-250)

# வவுனியா பிரதேச செயலக மட்ட மாணவர்களுக்கான ஆற்றல் போட்டிகள்

(பூந்தோட்டம்)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தினையும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாற்றுவலுவுடையோர் தினத்தினையும் முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகத்தினால் பாடசாலை மாணவர்களிடையே ஆற்றல் வெளிப்பாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா அறிவித்துள்ளார்.

தரம் -1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு எம்மை நாமே பாதுகாப்போம் எனும் தலைப்பிலான அபிநயப் பாடல் போட்டியும் தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான மாணவர்களுக்கு முதியோர் அபிவிருத்திக்கான புதிய சக்திகள் எனும் தலைப்பிலான பேச்சுப் போட்டியும் தரம் -9 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனும் தலைப்பிலான பேச்சுப் போட்டியும் தரம் 12 ,13 மாணவர்களுக்கு வினாவிடைப் போட்டியும் திறந்த போட்டியாக நாடகப் போட்டியும் இடம்பெறவுள் ளதாகவும் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்களை அதி பர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சிறுவர் உரிமைகள் மேம் பாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ம-266)




# சிறுமியை கடத்தி வைத்திருந்த நபர்களுக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த 15 வயது நிரம்பிய சிறுமி ஒருத்தியை கடத்தி சென்று முள்ளியவளை பகுதியில் வைத்திருத்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பெண் ஒருவரையும், இளைஞர் ஒருவரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி பெண் இதேபோல வேறு ஒரு 17 வயது நிரம்பிய பெண் ஒருவரையும் கடத்தி சென்று தனது மகனுடன் சேர்த்து வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு விளக்க மறியிலில் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெண்ணின் நடவடிக்கை காரணமாக அவரது இரு பெண் பிள்ளைகளுக்கும் மக னுக்கும் பாதிப்பு ஏற்படும் எனக் கருதி பொலிஸாரின் விண்ணப் பத்தின் மேல் பெண்கள் இருவரையும் பாரதி சிறுவர் இல்லத்திலும் ஆண் பிள்ளையை அன்பு இல்லத் திலும் சேர்க்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார். (அ-ம)

# கூட்டமைப்பு உறுப்பினர் அரசு பக்கம் தாவினார்

(குருமன்காடு)

வவுனியா நகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் க.குமாரசாமி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் நேற்றுமுன்தினம் மாலை இணைந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (புளொட்) உறுப்பினர் க.குமாரசாமி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வவுனியா குருமன்காட்டில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் சுதேச வைத்திய மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த முன்னிலையில் இணைந்து கொண்டார். அவருடன் வவுனியா பஸ்நிலைய வர்த்தகர் நலன்புரிச்சங்கத் தலைவரும் அவரது மகனுமாகிய கு.சஜிஸ்கு மாரும் ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்துள்ளார்.

இவர்கள் இருவரும் புளொட் அமைப்பின் நீண்டகால உறுப்பினர்களாவர். க.குமாரசாமி புளொட் அமைப்பு சார்பில் இரண்டுமுறை வவுனியா நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-250-266)

# விரைவு கணித போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட விரைவு கணிதப் போட்டியில் வெற்றியீட்டி மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகி உள்ள மாணவர்களின் விபரங்களை வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார்.

வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் வருமாறு:

தரம்-2: ஞா. தனுசிகா- வ/பண்டாரிகுளம் விபுலானந்தா கல்லூரி.

தரம்-3: ச.பிரணவி-வ/இறம்பைக் குளம் மகளிர் ம.வி.

தரம் -4:கி.தர்சன் - வ/பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி.

தரம்-5: எ.சொரூபிகா -வ/சைவப் பிரகாச ஆரம்பப் பாடசாலை. (ம-266)

# மின்சாரம் தாக்கியதில் இளைஞன் படுகாயம்

(கனகபுரம்)

மின்சாரம் தாக்கி படுகாயமடைந்த இளைஞன் ஒருவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 11 மணியளவில் கிளிநொச்சி பொன்னகர் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

வீட்டின் கேற்றிற்கு மின்குமிழ் பொருத்துவதற்காக அலவாங்கை பயன்படுத்தியவேளை அலவாங்கு மின் கம்பியில் பட்டதிலேயே குறித்த இளைஞன் மீது மின்சாரம் தாக்கியுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த இராஜேந்திரன் மயூரன் (வயது 22) என்ற இளைஞனே மின்சாரம் தாக்கி சிகிச்சை பெற்று வருகிறார். (ம-259)

# பாம்புக்கடிக்கு இலக்கான சிறுமி வைத்தியசாலையில்

(கனகபுரம்)

நாகபாம்புக் கடிக்கு இலக்கான சிறுமி படுகாயமடைந்து சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6 மணிக்கு திருநகர் வடக்கில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

பாடசாலைக்கு கொண்டு செல்வதற்காக புத்தகங்களை எடுத்த வேளை புத்தகங்களுக்குள் நின்ற பாம்பே குறித்த சிறுமியை தீண்டியுள்ளது.

இச்சம்பவத்தில் சுரேஸ்குமார் சத்தியப்பிரியா (வயது 12) என்ற சிறுமியே பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுவருகிறார். (ம-259)

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்.

– எமர்சன்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## ஈழ மண்ணில் இந்து மத குருபீடம் அமைக்கப்பட வேண்டும்

இந்திய தேசத்தில் இந்து சமயத்தின் உயர் பீடமாக காஞ்சி காமகோடி பீடம் அமைந்துள்ளது.

இந்து ஆலயங்கள், அவற்றின் வழிபாட்டு நடைமுறைகள் என அனைத்து விடயங்களுக்கும் தீர்வு காணக் கூடிய வகையில், காஞ்சி காம கோடி பீடத்தின் அமைப்பு இருப்பது இங்கு நோக்குதற்குரியது.

அதேநேரம் எத்தனையோ ஆலயங்களின் பரிபாலனங்களையும் காஞ்சி காமகோடி பீடம் மேற்கொண்டு வருவது குறிப்பிடற்குரியது.

அந்தண உத்தமர்கள் பிரம்மச்சாரியத்தை கடைப்பிடித்து இந்த உயர்பீடத்தை இந்து சமயத்தின் தலைமைப் பீடமாக நடத்திவருகின்றனர்.

தனித்து இந்து சமயத்தின் தலைமைப் பீடமாக மட்டுமன்றி சமூக சேவைகளை மேற்கொள்வதிலும் காஞ்சி காமகோடி பீடம் முன்னின்று உழைக்கின்றது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள சங்கர் நேத்திராலயா என்ற கண் சிகிச்சை வைத்திய சாலை சர்வதேச தரத்தில் கண் சிகிச்சைக்கென தனித்துவமாக அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையை காஞ்சி காம கோடி பீடமே இயக்கி வருகின்றது என்ற உண்மையை ஈழத்தின் அந்தணச் சிவாச்சாரியர்கள் கவனத்தில் கொள்வது காலத்தின் தேவையாகும்.

இந்தியாவின் காஞ்சி காமகோடி பீடம் இந்து சமயத்தின் தலைமைப்பீடமாக இருந்து இந்து சமய விவகாரங்களை எங்ஙனம் கவனிக்கின்றதோ அதுபோல எங்கள் ஈழத் திருநாட்டிலும் இந்து சமயத்திற்கான தலைமைப் பீடம் அமைக்கப்பட வேண்டும்.

இந்து சமயத்திற்காக அமைக்கப்படும் தலைமைப்பீடமானது சுதந்திரமாக சமய, சமூகப் பணிகளை முன்னெடுக்கக் கூடியதாக, இந்து ஆலயங்களில் காணப்படும் வழக்குகள்; பிணக்குகள் என்பவற்றைத் தீர்க்கக்கூடியதாக இருப்பதும் அவசியம்.

சமகாலத்தில் எங்கள் மண்ணில் இருக்கக்கூடிய பல இந்து ஆலயங்கள் பிணக்குகள் காரணமாக நீதிமன்றங்களின் தீர்ப்பை நாடி நிற்கின்றன.

வழிபாட்டுத் தலங்கள் சமூகத்தில் ஏற்படக் கூடிய பிணக்குகளை – முரண்பாடுகளை தீர்த்து ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவை.

ஆனால் இங்கோ ஆலய நிர்வாகங்கள், கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டதன் இலக்கை மறந்து போட்டி பூசல்கள் கொண்டு ஆலயங்களை நீதிமன்றங்களில் நிறுத்தி விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றன.

இத்தகைய செயல்கள் இறைநம்பிக்கையை – ஆலயவழிபாட்டுநடைமுறைகளைசிதறடித்து விடும்.

எனவே இந்து சமயம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின்–அந்தணச் சிவாச்சாரியர்கள் மரியாதைக்குரியவர்களாகப் போற்றப்பட வேண்டுமாயின் இந்து மத குரு பீடம் அமைக்கப்படுவது மிகமிக அவசியமாகும்.

இது விடயத்தில் கவனம் செலுத்தி வருகின்ற தூரநோக்கும் தீர்க்கதரிசனமும் கொண்ட அந்தணச் சிவாச்சாரியர்களுக்கு ஏனைய சிவாச்சாரியர்கள் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து தனித்துவமாக இந்து மத குருபீடத்தைத் தோற்றுவிக்க முன்வரவேண்டும்.

இந்து சமயத்திற்கென தனித்துவமான தலைமைப்பீடம் இருக்குமாயின் இந்து சமயத்திற்கு வந்துள்ள–வரவிருக்கின்ற ஆபத்துக்களை முறியடிப்பது மிகச் சுலபமாகும்.

இது தொடர்பில் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் இந்து மாநாடொன்றை வட மாகாணத்தில் ஏற்பாடு செய்து நிதி, நிலம் என்பவற்றைத் திரட்டி இந்து மத குரு பீடத்தை பிரமாண்டமான முறையில் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

## நாட்டைவிட்டு வெளியேறினார் ஊடகவியலாளர் மந்தனா!

சண்டேலீடர் பத்திரிகையின் இணையாசிரியர் மந்தனா இஸ்மயில் அபயவிக்கிரம இலங்கையை விட்டு வெளியேறியிருக்கிறார்.

3 வாரத்திற்கு முன்பு அவரது வீட்டில் இரவில் புகுந்த முகமூடியணிந்த நபர்கள் மந்தனாவையும், அவரது குடும்பத்தவரையும் கத்திமுனையில் மிரட்டிய பின்னணியில் அவர் இலங்கையை விட்டு வெளியேறியிருப்பது இலங்கைக்குள், “ஊடகவியலாளர்களுக்கு எதிரான போர்” தொடருவதைக் காட்டுவதாக ஊடகவியலாளர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்பு கவலை வெளியிட்டிருக்கிறது.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது மரணத்துக்குப் பிறகு ஆசிரியர் பொறுப்புக்கு வந்த பிரெட்ரிகா ஜோன்ஸ் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அந்த வரிசையில் மூன்றாவதாக மந்தனா தற்போது இலங்கையை விட்டு வெளியேறியிருப்பது ஊடகவியாலாளர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் அமைப்புக்கள் மத்தியில் கவலையைத் தோற்றுவித்திருக்கிறது.

தாம் சில மாத காலம் தற்காலிகமாக இலங்கையை விட்டுவெளியேறியிருப்பதாகவும் மீண்டும் இலங்கைக்கு திரும்ப விரும்புவதாகவும் மந்தனா பிபிசியிடம் தெரிவித்தார்.

அதேசமயம், அவர் தனது பாதுகாப்பு காரணங்களுக்காகவே இலங்கையை விட்டு வெளிநாட்டுக்குச் சென்றிருப்பதாக மந்தனாவின் வழக்கறிஞர் கூறினார்.

அவர் தனது குடும்ப உறுப்பினர்களையும் தன்னோடு அழைத்துச் சென்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி இரவு அவர் வீட்டுக்குள் புகுந்த 4 முகமூடியணிந்த ஆண்கள், மந்தனாவின் முகத்தில் குத்தி அவரை மிரட்டியதோடு, அவரது 10 வயது மகள் மற்றும் மந்தனாவின் வயதான பெற்றோர் ஆகிய மூன்று பேரின் கழுத்திலும் கத்தி வைத்து மிரட்டினார்கள்.

வந்தவர்கள் வீட்டிலிருந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றார்கள் என்றாலும், அவர்கள் மந்தனாவின் வீட்டில் இருந்த ஆவணங்கள் பலவற்றையும் மணிக்கணக்கில் தோண்டித் துருவி சோதித்துப் பார்த்தனர்.

இந்த சம்பவத்துக்குப் பிறகும், மந்தனா வீட்டில் இரண்டாவது முறையும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. அதில் அவரது கணினி திருடிச் செல்லப்பட்டது.

சர்ச்சைக்குரிய கட்டுமானப் பணி தொடர்பான ஊழலை மந்தனா அம்பலப்படுத்துவதைத் தடுக்கவே அவர் குறி வைக்கப்பட்டார் என்று எதிர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியிருக்கிறார்.

தற்போது மந்தனா தற்காலிகமாக நாடுகடந்து சென்றிருக்கும் நிலையில், சமீப ஆண்டுகளாக ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன்னர் நிறுத்த இலங்கை அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கையின் சுதந்திர ஊடக அமைப்பு கோரிக்கை விடுத்திருக்கிறது. (எ-11)

## சத்திய தரிசனம்



உண்மையைக் கூறின் மகான்கள் இவ்வாறுதான் வாழவேண்டும் என்று எந்த சாத்திரமும் வழிவகுக்கவில்லை. அவர்கள் வாழவேண்டிய நெறியை அவர்களே அறிவர். அவர்களது ஞானம் அனைத்தையும் நெறிப்படுத்தி அவர்தம் செயலைத் தூய்மைப்படுத்தும். தன்னம்பிக்கை, பயனுள்ள செயல்கள் இவை இரண்டும் அவர்களது சிறப்புக் குணங்கள்.

மேடைமீது கிளிப்பிள்ளைபோல் வெறும் பேச்சுப்பேசுதல், விவேகமாகவும் சாதுர்யமாகவும் வியாக்கியானம் செய்தல் இவை அனைத்தும் விலகவேண்டும். தன்னுள் அடங்கிய சைதன்யம், தெய்வீகம் உற்றது என்று அறிந்த ஒருவன் நிலையற்ற சரீர சம்பந்தமான கவர்ச்சிகளில் ஆசையுற்று மயங்கி அழியான்.

நீங்கள் செல்வத்தைத் தேடி அடைந்திட வேண்டும். ஆனால் அந்தச் செல்வத்தினை தவறாகப் பயன்படுத்திடக்கூடாது. அப்பொழுது மட்டுமே நான் மகிழ்ச்சியடைவேன். அத்தகு மக்களுக்கு எந்த உதவியையும் நான் அளித்திடுவேன்.

உண்மையில் நான்கினுள் கலியுகமே மிகுந்த பலன் அளிக்கும் யுகமாகும். ஏனெனில் உங்களிடையே ஆனந்தத்தின் நிலையான சொரூபத்தை நீங்கள் அணுகிப்போற்றி அதிலிருந்து கற்றுக்கொள்ளும் வகையில் கொண்டுள்ளீர்கள். நீங்கள் என்னுடன் பாடுகிறீர்கள். என்னுடன் பேசுகிறீர்கள். உங்களது கண்கள், காதுகள் மற்றும் இதயங்களை எனது பேச்சுக்களாலும் செயல்களாலும் நிரப்பிக் கொள்கிறீர்கள்.

## தமிழ் மக்களுடைய எதிர்காலம் மஹிந்த சிந்தனையில்-அஸ்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுடைய எதிர்காலம் மகிந்த சிந்தனையிலேயே உள்ளது என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஸ்வர் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச செயலக கட்டிடத் திறப்பு விழா நேற்று முற்பகல் 11 மணியவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களுடைய எழுச்சி எதிர்காலம் மகிந்த சிந்தனையிலேயே உள்ளது. பாதைகளை பாருங்கள்; கட்டிடங்களைப் பாருங்கள்; வைத்தியசாலைகளைப் பாருங்கள்; எல்லாம் அபிவிருத்தியடைந்துள்ளன.

புத்தியுள்ளவர்கள்தான் வடக்கில் நிர்வாக சேவைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். பொன்மயமான எதிர்காலம் உங்களுக்கு உள்ளது. நாட்டின் அபிவிருத்தியில் 80 வீதம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கே ஒதுக்கப்படுகின்றது. ஒரே இலங்கையில் அபிவிருத்தியடைந்த மக்களாக வாழ்வோம் என ஜனாதிபதிக்கு புகழ்பாடினார் அஸ்வர் எம்.பி. (அ-4)

## 750 பேருக்கு மிளகாய் விதைகள் வழங்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் மிளகாய் பயிர்ச் செய்கையை விருத்தி செய்யும் நோக்கோடு மாவட்ட விவசாய திணைக்களத்தினரால் 750 பேருக்கு மிளகாய் விதைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் 250 பேருக்கு ஏற்கெனவே சிறுபோகச் செய்கையின் போது மிளகாய் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கு இம்மாதத்திற்குள் வழங்கப்பட்டுவிடுமென விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-9)

## இளையோருக்கான தொழில் பயிற்சி

(கரணவாய்)

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள இராஜ கிராமம், இமையாணன், காட்டுப்புலம் ஆகிய மூன்று கிராமங்களிலுமுள்ள இளைஞர்களுக்கான ஆறு மாதகால தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றுவரும் இப் பயிற்சிநெறி கடந்த வாரம் முதல் ஆரம்பமாகி 6 மாதங்கள் வரை நடைபெறவுள்ளன. பயிற்சி நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-60)

## இஸ்ரேலுக்கு ஆதரவாக எழுதிய இலங்கையருக்கு விருது

(கொழும்பு)

இலங்கையில் பிறந்த ரிமோன் டயஸ் என்பவருக்கு நேர்மையான செய்தியிடல் எனும் விருது வழங்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தேசத்திற்கு ஆதரவாக கட்டுரைகளை எழுதியதற்காகவே குறித்த விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பற்றி ஒரு பக்கச் சார்பாக பாத கமாக எழுதப்படும் செய்திகளைக் கண்கா ணிக்கும் ஊடக கண்காணிப்பு அமைப்பு இந்த வருடத்திற்கான 2 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான பிணாங் பெல்ட் விருதை இலங்கையில் பிறந்து நெதர்லாந்தில் வளர்ந்த ரிமோன் டயசிற்கு வழங்கியது.

இவரது பரிசு பெறும் கட்டுரைகள் ஜெருசலேம் போஸ்ட் பத்திரிகையில் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விநாயகரை தண்ணீரில் கரைப்பது ஏன்?



விநாயகர் சதுர்த்தி தினத்தில் விரதம் இருந்து மிருக்திகை (மண்) கொண்டு செய்யப்பட்ட விநாயகருக்கு பூஜை செய்ய வேண்டும் என்று யசூர் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த மண்ணில் புகழ், கீர்த்தி, பாபநிவர்த்தி, தேகபுஷ்டி சர்வமும் கிடைப்பதாக வேதங்கள் கூறுகின்றன. சதுர்த்தி தினத்தில் மட்டும் மிருக்திகை கொண்டுதான் விநாயகர் சிலைகள் செய்யவேண்டும். மண்ணினால் செய்யப்பட்ட சிலைகள் நீண்ட நாட்களுக்கு தாக்குப்பிடிக்காது. இதனால் பூஜை முடிந்த 4ஆவது நாளில் தண்ணீரில் கரைக்கலாம். தண்ணீரில் கரைப்பதால் மணல் தண்ணீரோடு கரைந்து விடுகிறது. விநாயகர் சிலையில் இருந்த மணல் மற்றவர்கள் காலில்படாது. தோஷம் நீங்கும். இதனால்தான் விநாயகர் சிலைகள் பஞ்ச பூதங்களில் ஒன்றான தண்ணீரிலோ, கடலிலோ, குளத்திலோ, கிணற்றிலோ கரைக்கப்படுகிறது. விநாயகர் கரைக்கப்படுவதை சமஸ்கிருதத்தில் அம்ருத எவஸ்வர்கே லோகே ப்ரபித் விஸ்பதி என்று வேதங்கள் கூறுகின்றன.

# ‘பொட்டு’ வைத்து...



தமிழகத்தைச் சேர்ந்த இந்திய கிரிக்கெட் வீரர் எல்.பாலாஜிக்கும், மொடல் அழகி பிரியா தலூருக்கும் சென்னையில் மிகவும் எளிமையான முறையில் திருமணம் நடைபெற்றது. பிரியா தலூர் மொடல் அழகியாக இருந்தபோதும் தமிழ் கலாசாரத்தின்படி ‘பொட்டு’ வைத்து அவரை தனது மனைவியாக ஏற்றுக்கொண்டார் பாலாஜி. முன்னணி கிரிக்கெட் வீரர்கள் பல்வேறு போட்டிகளில் விளையாடுவதால் திருமண நிகழ்ச்சியில் பலர் பங்கேற்கவில்லை.

வேகப்பந்து வீச்சாளரான பாலாஜி 8 டெஸ்ட், 30 ஒருநாள் போட்டி மற்றும் ஐந்து ரி - 20 போட்டிகளிலும் விளையாடி உள்ளார்.

# பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் இந்திய வீரர் ஜடேஜா முதலிடம்



ஒருநாள் போட்டி பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலில், இந்தியாவின் ரவிந்திர ஜடேஜா முதலிடத்தை பிடித்துள்ளார்.

இங்கிலாந்து சென்ற அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என கைப்பற்றியது. இதை தொடர்ந்து ஒருநாள் போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) வெளியிட்டது.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் ரவிந்திர ஜடேஜா (733), முதலிடத்தை மேற்கிந்தியத் தீவுகளின் சுனில் நரைனுடன் (733) பகிர்ந்து கொண்டுள்ளார்.

பாகிஸ்தானின் சயீத் அஜ்மல் (723), இங்கிலாந்தின் ஸ்டீவன் பின் (708) ஆகியோர் இப்பட்டியலில் 3ஆவது, 4ஆவது இடத்தை பிடித்தனர்.

சிறந்த சகலதுறை வீரர்களுக்கான பட்டியலில், இந்திய வீரர் ரவிந்திர ஜடேஜாவை (377) பின்னுக்கு தள்ளி, அவுஸ்திரேலியாவின் ஷேன் வொட்சன் (384) மூன்றாவது இடம் பிடித்தார். இப்பட்டியலில், பாகிஸ்தான் வீரர் முகமது ஹபீஸ் (438), வங்கதேசத்தின் சாகிப் அல் ஹசன் (387) ஆகியோர் முதல் இரண்டு இடத்தில் உள்ளனர்.

இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில்,

தென்னாபிரிக்காவின் ஆம்லா (853), டிவிலியர்ஸ் (845), இலங்கையின் சங்ககரா (829) ஆகியோர் இப்பட்டியலில் முதல் மூன்று இடத்தில் உள்ளனர்.

இந்திய வீரர் விராட் கோஹ்லி (819 புள்ளி) நான்காவது இடம் பிடித்தார். இந்திய அணித் தலைவர் தோனி (741) தனது 7ஆவது இடத்தை தக்கவைத்துக்கொண்டார். இவர்களை தவிர, மற்றைய இந்திய வீரர் யாரும் "டொப்-10இல்" இடம் பெறவில்லை.


# லாலீகா காற்பந்து தொடரில்....

செல்டா விகோ அணிக்கு எதிரான லா லிகா காற்பந்து தொடரின் லீக் போட்டியில் அத்லெடிக் பில்பாடே அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா காற்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதன் லீக் போட்டியில் அத்லெடிக் பில்பாவோ, செல்டா விகோ அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியின் ஆரம்பத்தில் செல்டா விகோ அணிக்கு சார்லஸ் (14ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு அத்லெடிக் பில்பாவோ அணியின் மைக்கேல் ஷான் ஜோஸ் (18) பதிலடிகொடுத்தார். இதையடுத்து போட்டி முதல் பாதியில் 1-1 என சமநிலை வகித்தது.

பின் இரண்டாவது பாதியில் அத்லெடிக் பில்பாவோ அணியின் அந்தோனி (61), பேனாத் (68) ஆகியோர் கோல் அடித்தனர். கடைசிவரை போராடிய செல்டா விகோ அணிகு சான்டி மினா (79) ஒரு கோல் மட்டும் அடித்தார். இறுதியில், அத்லெடிக் பில்பாவோ அணி, 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# ஆஸியிடம் வீழ்ந்தது இங்கிலாந்து



இங்கிலாந்துக்கு எதிரான கடைசி ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம், 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2-1 என்ற கணக்கில் வெற்றிபெற்று தொடரை தனதாக்கிக்கொண்டது.

அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. முன்னதாக 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் இங்கிலாந்திடம் அந்த அணி இழந்தது. இந்நிலையில் ஒருநாள் போட்டித் தொடர் நடைபெற்றது. முதல் மற்றும் மூன்றாவது ஆட்டங்கள் மழையால் கைவிடப்பட்டன.

2ஆவது ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவும், 4 ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்தும் வெற்றி பெற்று, தொடர் 1-1 என்ற சமநிலையானது.

இந்நிலையில் 5ஆவது ஆட்டம் இங்கிலாந்தின் சவுதாம்ப்டன் நகரில் பகல்-இரவு ஆட்டமாக இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

தொடக்க ஆட்டக்காரர்கள் சொதப்பியதால், 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து ஆஸி அணி தத்தளித்தது. அடுத்து வந்த அணித் தலைவர் கிளார்க்கும், வொட்சனும் அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இந்த ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்கு 163 ஓட்டங்களை சேர்த்தது குறிப்பிடத்தக்கது. அதன்பின் விக்கெட்டுகள் மளமளவென சரிந்தாலும், வொட்சன் மட்டும் நிலைத்து நின்று அணியின் ஓட்டத்தை உயர்த்தினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வொட்சன், தன் சதத்தை பூர்த்தி செய்தார். அதன்பின், தன் புயல்வேக ஆட்டத்தைத் தொடர்ந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 282 ஆக உயர்ந்தபோது வொட்சன் ஆட்டமிழந்தார். அவர் 107 பந்துகளை சந்தித்து 143 ஓட்டங்களைச் சேர்த்தார். இதில் 12 பவுண்டரிகள், 6 சிக்சர்கள் அடங்கும். முடிவில் ஆஸி. அணி 49.1 ஓவர்களில் 298 ஓட்டங்களை எடுத்து சகல இலக்குகளையும் இழந்தது. இங்கிலாந்து தரப்பில் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகளும், ஜோர்டன் 3 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

299 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு தொடக்கமே அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க ஆட்டக்காரர் பீட்டர்சன் டக் அவுட் ஆன நிலையில், அடுத்து களமிறங்கிய வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, 68 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது.

அடுத்து களமிறங்கிய அந்த அணியின் நம்பிக்கை நட்சத்திர வீரர் போபராவும் விக்கெட் காப்பாளர் பட்லரும் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

அவுஸ்திரேலிய சுழல் பந்துவீச்சாளர் பால்கனரின் அற்புத பந்துவீச்சில் பட்லர் விக்கெட்டை பறிகொடுத்தார். அடுத்த சில நிமிடங்களில் போபராவின் விக்கெட்டை வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் சாய்த்தார். இது ஜான்சனுக்கு 200ஆவது விக்கெட் ஆகும். அதன்பின் வந்த வீரர்களும் அதிக நேரம் நிலைக்கவில்லை. இதனால் அந்த அணி 48 ஓவரில் 249 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஆஸி. தரப்பில் பால்கனர் 3, ஜோன்சன் 2 விக்கெட்களும் கைப்பற்றி அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

ஆட்ட நாயகனாக வொட்சனும், தொடர் நாயகனாக கிளார்க்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கினார் குரேசிய வீரர்

ஊக்கமருந்து பரிசோதனையில் சிக்கிய குரோஷிய டெனிஸ் வீரர் மரின் சிலிச்சுக்கு 9 மாதங்கள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 9 சர்வதேச பட்டங்களை வென்றவரான சிலிச் உலக தரவரிசையில் தற்போது 24ஆவது இடம் வகிக்கிறார்.

கடந்த ஏப்ரல் மாதம் முனிச் ஓபன் டெனிஸ போட்டியின்போது சிலிச்சிடம், வழக்கமான ஊக்கமருந்து பரிசோதனைக்காக சிறுநீர் மாதிரி சேகரிக்கப்பட்டது. சோதனை முடிவில் அவரது உடலில் ‘நைக்தமிட்’ என்ற ஊக்க மருந்தின் தாக்கம் இருப்பது தெரிய வந்தது. இந்த விவகாரம் சமீபத்தில் வெளியானது.

இது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. அப்போது அவர், ‘நான் தெரிந்தோ அல்லது வேண்டுமென்றே ஒருபோதும் ஊக்கமருந்தை சாப்பிட்டதில்லை. எனது குழுவை சேர்ந்த ஒருவர் மூலம் ‘கோரமைன் குளுக்கோஸ்’ மாத்திரைகளை வாங்கி உட்கொண்டேன். ஆனால் அதில் தடை செய்யப்பட்ட மருந்துகளின் தாக்கம் இருப்பது எனக்கு தெரியாது’ என்று கூறினார்.

இந்நிலையில், உடல்திறனை அதிகரிக்கவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் அவர் மருந்தை எடுத்துக் கொள்ளவில்லை என்ற அவரது விளக்கத்தை ஏற்றுக் கொண்ட சர்வதேச டெனிஸ் சம்மேளனம், அவர் மீது குறைந்தபட்ச நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

இதன்படி அவருக்கு 9 மாத காலம் டெனிசில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தடை காலம் மே முதலாம் திகதி அமுலுக்கு வருவதாகவும் அது 2014ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி முடிவடைவதாகவும் சர்வதேச டெனிஸ் சம்மேளனம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மீது மீசாலையில் நேற்றுத் தாக்குதல்!



(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை வேட்பாளர் கேசவன் சயந்தன் முறையிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இராணுவத்தினர் தொடர்ச்சியாக பின் தொடர்ந்து வந்து அச்சுறுத்தி வந்தனர்.

இதனையும் மீறி ஒரு கட்டத்தில் அவர்கள் எமது வாகனங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலில் கூட்டமைப்பினரின் வாகனங்கள் சில இராணுவச் சிப்பாய்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பாக பொலிஸாருக்கும் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என சயந்தன் தெரிவித்தார். (எ-11)

# இராணுவத் தலையீடு தடுக்கப்பட வேண்டும்

## கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் இராணுவம் எந்த விதத்திலும் தலையிடாமல் முகாமிற்குள் முடங்கியிருக்க வேண்டுமென்று சர்வதேச கண்காணிப்பாளர் குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோரியுள்ளனர்.

அத்தோடு இராணுவம் தேர்தலில் தலையிடுவது தொடர்பாகவும் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இதனை வடக்கு மாகாண சபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழுவின் தலைவரும் இந்தியாவின் முன்னாள் தேர்தல்கள் திணைக்கள தலைமை ஆணையாளருமான கோபாலசுவாமி உறுதிப்படுத்தியுள்ளார்.

யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவரினால் வடக்குத் தேர்தலில் இராணுவத்தினரின் தலையீடு தொடர்பாக பல முறைப்பாடுகள் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச கண்காணிப்புக்குழு ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா? எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்திருந்தார்.

அத்தோடு தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக இப்போது ஒன்றும் கூறமுடியாது. ஆனால் அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் தெரிவித்திருந்தார். (எ-6)

# பதுமன் விடுதலை



தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் என்ற சிவசுப்ரமணியம் வரதநாதனை திருகோணமலை மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

2009-ம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் பதுமன் இராணுவத்திடம் சரணடைந்ததுடன், அவர் பயங்கராத தடுப்புச சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் இராணுவத்தினரை கொலை செய்தமை ஆகிய பிரதான குற்றங்கள் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் இந்த குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதுமான சாட்சியங்கள் இல்லை எனக் கூறி திருகோணமலை நீதிமன்றம் பதுமனை விடுதலை செய்துள்ளது. (எ-11)

# வெட்டுக் காயத்துடன் சடலம்

(கிளிநொச்சி)

வெட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றிரவு 7 மணியளவில் கிளிநொச்சிப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் அவரது வீட்டிலேயே மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதேயிடத்தினைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை மனோகரன் (வயது - 65) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-11)

# அதிகரித்த இராணு...

தெரிவித்த தகவல்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமைந்திருந்தது.

"ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் விசேட அறிக்கையாளர்களின் விஜயத்திற்கான திகதிகளை அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் தேவையான இடங்களுக்கு செல்வதற்கான அனுமதியையும் வழங்க வேண்டும். சிறுபான்மை மதத்தவர்களுக்கு எதிரான வன்முறைகள், அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக மிதமிஞ்சிய சக்தியாக படையினரைப் பயன்படுத்தல், கருத்து சுதந்திர மீறல்கள் மற்றும் மனிதவுரிமைகள் பாதுகாவலர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பழிவாங்கல்கள் தொடர்பாக நாம் தொடர்ந்தும் கவலை கொண்டுள்ளோம்" என்று அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜேர்மன் பிரதிநிதி ஹான்ஸ் சூமேக்கர் இந்த விவாதத்தில் இலங்கை பற்றி பேசுகையில்,

"இலங்கையில் மனிதவுரிமைகள் நிலைவரம் தொடர்பில் கவலைகள் இன்னும் உச்ச நிலையிலேயே இருக்கின்றன. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அல்லது 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் கொடுமைகள் தொடர்பாக விசாரிப்பதற்கான பயனுறுதி மிக்க நடவடிக்கைகள் இன்னும் நிலுவையிலேயே காணப்படுகின்றன.

வட மாகாண சபைத் தேர்தலானது சுதந்திரமானதும் நீதியானதாகவும் நடைபெறும் அதேநேரம் 13வது அரசியலமைப்பு திருத்தம் இரத்துச் செய்யப்படாமல் இருந்தால் மட்டுமே, நடைபெறவிருக்கும் வட மாகாண சபைத் தேர்தலானது தமிழ் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் அவர்களுக்கான வாக்குரிமையை வழங்கவும் உதவியாக அமையும். இதேநேரம், ஊடகவியலாளர்கள், மனிதவுரிமைகள் பாதுகாவலர்கள மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பணியாற்றுவதற்கான நிலைமைகள் தொடர்ந்தும் சீரழிந்து வருகின்றன" என்று தெரிவித்துள்ளார். (எ-11)

# பிரபாகரனுக்கு ஏற்பட்ட...

கும் நாடாளுமன்ற உறுப்பினராக அண்மையில் நியமனம் செய்யப்பட்ட அஸ்வர், அனுராதபுரத்தில் இடம்பெற்ற ஆளும் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு மிரட்டல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

"மறைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பதிலாக, தற்போது இன்னொரு பிரபாகரன் தோற்றம் பெற்றுள்ளார். அவர்தான் தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் வட மாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன்.

இலங்கையில் முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற போரின் மூலம் விடுதலைப் புலிகளால் அடைய முடியாத தமிழீழத்தை, வடக்குக் கிழக்கை இணைப்பதன் மூலம் அடைந்து கொள்ளும் கனவுடன் அவர் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியமான முடிவே, விக்னேஸ்வரனுக்கும் ஏற்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் வடக்குக்கு மட்டும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைக் கோருகின்றார்.

தமது கோரிக்கை நிறைவேறாது போனால் அதற்காக இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பை கோருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது இலங்கையின் இறையாண்மைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்" என்று அஸ்வர் எம்.பி மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# அமைதியான தேர்தல்...

யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவரினால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியாக இடம்பெறும் என்ற நம்பிக்கையுள்ளது. நம்பக்கைதான் வாழ்க்கையின் ஆதாரம்.

வன்முறைகள் எதுவும் இடம்பெறவில்லை என்று கூறமுடியாது. ஆனால் கடந்த காலத்தைவிட குறைவாக இடம்பெற்றுள்ளதாக தேர்தல் தொடர்பான அவதானிப்புக்களை மேற்கொண்டவர்கள் எங்களிடம் கூறியுள்ளனர்.

அந்தவொரு விடயத்தை வைத்துப் பார்க்கும்போது முன்பு இடம்பெற்றதைவிட தற்போது வித்தியாசமான சூழ்நிலை நிலவுகின்றது.

யாழ்ப்பாணத்திற்கு நாம் வருகை தந்த பின்பு இன்று (நேற்று) இரண்டு முறைப்பாடுகள் ஏனைய கண்காணிப்பாளர்களுக்கு கிடைத்தது என்றும் ஆனால் ஆதாரங்கள் எதுவும் இல்லை எனவும் இருப்பினும் முன்பு நடந்த சம்பவங்களுக்கு போதிய ஆதாரம் உள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் தேர்தலில் இராணுவம் தலையிட்டதாக இங்கு ஏற்கெனவே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த அமைப்புக்களிடம் முறையிடப்பட்டுள்ளது. அதுபற்றி நாமும் விசாரணை செய்வோம்.

இதுவரை அதாவது, ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்தும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்தும் இரண்டு கண்காணிப்புக் குழுக்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

என்ன நடந்தது என்பதை அவர்கள் எங்களிடம் தெரிவித்துள்ளனர் நாங்களும் அதுபற்றி விசாரணை செய்வோம்.

பொலிஸார் உரிய முறையில் தமது கடமையினைச் செய்யவில்லை என்று ஆளும் மற்றும் எதிர்த் தரப்பினாலும் குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது என்பது மட்டும உண்மை.

மேலும் தேர்தலில் வாக்கு எண்ணும் நிலையம் யாழ்.மத்திய கல்லூரியில் இருப்பதனால் முறைகேடுகள் இடம்பெறலாம் என்பதெல்லாம் ஊகம்தான். ஊகம் உண்மையாகாது. நடப்பதற்கு முன்பு எதனையும் கூற முடியாது.

அத்தோடு தேர்தல் கடமையில் ஈடுபட வெளி மாவட்டத்திலிருந்து அதிகாரிகள் வரவழைக்கப்படுவதற்கு முக்கிய காரணம் இங்கு போதியளவு அதிகாரிகள் இல்லை என மாவட்ட அரசாங்க அதிபரினால் கூறப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மழுப்பலாக பதிலளித்த சர்வதேச கண்காணிப்பு குழுவினர் தேர்தல் வன்முறைகள் குறைவாக இடம்பெற்ற மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் தேர்தல் திணைக்கள ஆணையாளர், பங்களாதேஷ் நாட்டின் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட 7 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (எ-6)

# சல்மான்...

அமைச்சர் பீரிஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைசசர் சல்மான் குர்ஷித் அடுத்த மாதம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# 80 ஆயிரம் பேரு...

அமைப்பும் ஆட்பதிவு திணைக்களமும் இணைந்து பல்வேறு இடங்களில் நடமாடும் சேவை மூலம் தேசிய அடையாள அட்டை வழங்கும் சேவையில் ஈடுபட்டிருந்தன.

இவ்வாறு விண்ணப்பங்கள் பெ[illegible]ட்டவர்கள் வட மாகாணத்தில 8[illegible]யிரம் வாக்காளர்களுக்கு தேசிய அடையாள அட்டை இன்னும் வழங்கப்படவில்லை என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இதன் மூலம் வடமாகாணத்தில் அதிகளவானோர் வாக்களிக்க முடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச் செயற்பாட்டின் மூலம் வட மாகாண சபைத் தேர்தலில் அதிகளவானோர் வாக்களிக்க முடியாமல் போகும் நிலை காணப்படுவதாக திணைக்கள வட்டாரங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6,11)

# யாருக்கு வாக்களிக்...

முடியும். இது தவிர, தொலைபேசி: 011-2689064, தொலைநகல் இல. 011-2694924 ஆகிய இலக்கங்களுடனும் தொடர்புகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் அவசர முறைப்பாடுகள்சம்பந்தமாக மனித உரிமைகள்ஆணைக்குழுவின் பிராந்திய நிலையங்களுடன் தொடர்பு கொள்ள யாழ்ப்பாணம்-021-2222021, கண்டி - 081-2228009, வவுனியா024-2222029 ஆகிய இலக்கங்களுடன்தொடர்பு கொள்ள முடியும்.

மாகாண சபைத் தேர்தலில் அச்சம் காரணமாக மக்கள் வாக்களிக்க தயங்க வேண்டாம். தேர்தலில் வக்களிப்பது அனைத்து மக்களினதும் உரிமையாகும்.

வாக்களிப்பதற்கு மக்கள் யாருககாகவும் அச்சமடையத் தேவையில்லை.

ஒவ்வொருவரும் வாக்களிக்கும் போது அவை யாருக்கு அளிக்கப்படுகின்றன என்பதை யாரும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தெரிந்து கொள்ள முடியாது என்பதை தேர்தல்கள் ஆணையாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போது இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் மக்களிற்கு சுதந்திரமும் நீதியானதுமான தேர்தலை நிலைநிறுத்துவதற்கு தேர்தல்சட்டம் மற்றும்ஏனைய நடைமுறையிலுள்ளஒழுங்கு விதிகளிற்கேற்ப அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றதா? எனபதை கண்காணித்துதேவையானதலையீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவினர் மூலம் அரச சொததுக்கள் அல்லது வளங்கள் ஆகியன தான்தோன்றித்தனமாக அல்லது பக்கச்சார்பாக பயன்படுத்தப் படுகின்றனவா என்பதை கண்காணித்தல்பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

அதற்கமைய தேரதல் கடமைகளில் ஈடுபடும் சகல உத்தியோகத்தர்கள் சகல பாதுகாப்புப் பிரிவினர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலிற்கான அவசியமான அடிப்படை வழிகாட்டல்கள் ஆணைக்குழுவினால் ஏற்கெனவேவழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

தேர்தல் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் சகல தேர்தல் சட்டமீறல் நடவடிக்கைகள் தொடர்பாக முறைப்பாட்டினை செய்ய மக்களை அக்கறை கொள்ளசெய்யவேணடும்.


அவ்வாறானசெயறபாடுகள் தொடர்பாக அவதானத்துடன் இருந்து கண்காணிப்பு அல்லது மீளாய்வு நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் தேர்தல் நடைபெறும் மாகாணங்களில் எங்களுடைய குழுக்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளிற்காக நியமிக்கப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)


## வீடு வாடகைக்கு உண்டு

ஆலடிச் சந்தி ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் (மாநகர சபை எல்லைக்குள்) அமைந்துள்ள இரு கடையுடன் கூடிய வீடு களஞ்சியப் படுத்துவதற்கோ, வாகனங்கள் தரிப்பதற்கோ வசதிகள் உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு:
0778332748, 0777110523

## இதயபூர்வமான நன்றிகள்

கடந்த 15.9.2013 அன்று சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்ந்த எமது திருமண வைபத்திற்கு நேரில் வருகை தந்து ஆசி கூறி அன்பளிப்பு நல்கியோருக்கும் வாழ்த்துமடல், தொலைபேசி, தந்தி, குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மூலம் வாழ்த்துக்கள் வழங்கியோருக்கும் பத்திரிகைகள் வாயிலாக வாழ்த்துக்கள் நல்கிய யாழ்.போதனா வைத்தியசாலை நண்பர்களுக்கும் அஸ்வினி மல்ரி பிளாசா முகாமையாளர் ஊழியர்களுக்கும் மேலும் மணமகன் மணமகள் இல்லங்களில் நடைபெற்ற வரவேற்பு உபசாரத்தில் கலந்துகொண்டு ஆசிகூறி அன்பளிப்புகள் நல்கிய அன்பர்களுக்கும் இந்நிகழ்விற்கு சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.74, ராஜா பிளாசா,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

சுமன் - பிரவீனா தம்பதிகள்.

(3972)









இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.